வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 26.06.2023 திங்கட்கிழமை | இதழ் : 199 | பக்கங்கள் : 16




## மது, புகை பாவனையால் தினமும் 100 பேர் மரணம்!

கொழும்பு, ஜூன் 26

மதுபானம், சிகரெட் உள்ளிட்ட புகைப் பாவனையால் நாட்டில் தினமும் 100 பேர் மரமடைகின்றனர் என்று போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இன்று உலக போதைப்பொருள் எதிப்பு தினமாகும். இதையொட்டி, போதைப்பொருள் தகவல் மையம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், சர்வதேச புகையிலை நிறுவனங்கள் கஞ்சாவை வியாபாரமாக செயல்படுத்துவதற்கு மூலோபாயமாக பணத்தை முதலீடு செய்து வருகின்றன. கஞ்சா பாவனையை முதலீட்டு திட்டமாக இலங்கையில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து பாதுகாக்க அனைவரின் பங்களிப்பும் அவசியம் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### காணி, பொலிஸ் அதிகாரங்களுடன்

# 13ஐ நடைமுறைப்படுத்த இந்தியா துணைநிற்கும்

## பிரிட்டன் தமிழர் மத்தியில் அண்ணாமலை

**லண்டன், ஜூன் 26**

**காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழர்களுக்கு இந்தியா துணைபுரியும் என்று இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**



லண்டன் - பர்மிங்ஹாமில் "தமிழராய் இணைவோம் - என் மண் - என் மக்கள்" என்ற இலங்கை - இந்திய புலம்பெயர் தமிழர்கள் பங்கேற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "2009 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பெரும் போரை நடத்தியபோது, அதனைத் தடுக்க அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி, தி. மு. க. கூட்டணிகள் தவறிவிட்டன. ஆனால், பாரதிய ஜனதா கட்சி இந்தப் போரை எதிர்த்தது", என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், மற்றும் பா. ஜ. க. அரசாங்கத்தின் கடந்த 9 ஆண்டுகால சாதனைகள் குறித்தும் அவர் இதன்போது விளக்கமளித்தார். (ஐ)

## ஒரே சீனா கொள்கையை இலங்கை ஆதரிக்கிறது!

### சீனாவில் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜூன் 26

இலங்கை எப்போதும் ஒரே சீனா கொள்கையை உறுதியாக ஆதரிக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சீனா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சின் கொங்கை சந்தித்த வேளையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

சீனா இலங்கையின் மிகச்சிறந்த நண்பன். முக்கியமான அபிவிருத்தி சகா. சீனாவின் தன்னலமற்ற உதவியை இலங்கை பாராட்டுகின்றது என்று கூறிய அவர், சீன நிறுவனங்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறும் அழைப்பு விடுத்தார்.

இலங்கையும் சீனாவும் ஒருவரை ஒரு வர் எப்போதும் மதித்துள்ளன - ஆதரித்துள்ளன என்றும் கூறினார். (ஐ)



## சிற்றூர்தி - ஹைஏஸ் விபத்து; ஒன்பது பேருக்கு படுகாயம்!

### கொடிகாமத்தில் நேற்று சம்பவம்

தென்மராட்சி, ஜூன் 26

பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்தியும் (மினிபஸ்) ஹைஏஸ் வாகனமும் நேருக்குநேர் மோதிய விபத்தில் 9 பேர் படுகாயமடைந்தனர்.

கொடிகாமம் நகருக்கு யாழ். - கண்டி (ஏ-9) நெடுஞ்சாலையில் நேற்று மதியம் 12.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

15

## கோட்டாபயவை பொறுப்புக்கூற வைப்பது என்பது சாத்தியமற்றது

**யஸ்மின் சூக்கா**

கொழும்பு, ஜூன் 26

மாத்தளையில் இடம்பெற்ற சம்பவங்களுக்காகவோ அல்லது இறுதிப் போரில் இடம்பெற்ற சம்பவங்களுக்காகவோ இந்த அரசாங்கம் கோட்டாபய ராஜபக்சவை பொறுப்புக்கூறச் செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம் - என்று சர்வதேச உண்மை நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

15

## மல்லாவி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூன் 26

கெப் ரக வாகனம் மோட்டார் சைக்கிளை மோதிய போது இரு வாகனங்களும் தீப்பற்றி எரிந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு - மல்லாவியில் பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் வவுனியா தேக்கவத்தையை சேர்ந்த கமலதாஸ் கபில்தாஸ் (வயது 26) என்பவர் உயிரிழந்தார். மல்லாவி - திருநகரை சேர்ந்த கமலநாதன் சபேசன் என்பவர் படுகாயடைந்தார்.

பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை கெப் ரக வாகனம்

15

### உள்ளூராட்சி தேர்தல்:

## வேட்பு மனுக்களை இரத்துசெய்யதிட்டம்!

கொழும்பு, ஜூன் 26

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் யோசனையை விவாதிக்க அரசாங்கம் தயாராகி வருகிறது.

இந்த விடயம் குறித்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர்

15

## ரணிலின் மதிப்பு சர்வதேசத்தில் உயர தமிழரசும் கூட்டமைப்புமே காரணம்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடல்

கொழும்பு, ஜூன் 26

ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கை சர்வதேச மட்டத்தில் உயர்த்தும் நோக்கில் இனப்பிரச்னைக்கு தீர்வு என்ற கண்துடைப்பு பேச்சுக்கு சென்ற தமிழரசுக் கட்சியினர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், விக்னேஸ்வரன் ஆகியோரை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பிலுள்ள அவரின் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

15

## வடக்கு, கிழக்கில் தற்போது மௌன யுத்தம் நடக்கிறது!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 26

தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்க வேண்டும் என்று திட்டமிட்டு 1949ஆம் ஆண்டு, முதல் பிரதமரான டி. எஸ். சேனநாயக்கா கிழக்கில் கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்த காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து விகாரைகள் அமைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**







யாழ்ப்பாணம் - புங்குடுதீவு கண்ணகை அம்மன் எனப்படும் இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடபெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# இலங்கை குறித்த ஐ. நா. ஆணையாளரின் வாய்மூல அறிக்கையை வரவேற்கிறோம்!

## தமிழ்த் கட்சிகளின் தலைவர்கள்

கொழும்பு, ஜூன் 26

இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறலை தவிர்த்து வருகின்ற நிலையில் ஒரு சிவப்பு எச்சரிக்கையாக அமைந்துள்ள ஐ. நா. ஆணையரின் வாய்மூலமான அறிக்கையை தாம் வரவேற்பதாக தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கான அழுத்தத்தினை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வலுவாக பிரயோகிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 53ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் தொடர்பிலான உயர்ஸ்தானிகர் வாய்மொழி மூலமான அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், அது குறித்து கருத்து வெளியிடும்போதே தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் எம். பியுமான விக்னேஸ்வரன் கூறுகையில்,

ஐ. நா. உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையானது, பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துள்ள மக்களை மேலும் துன்புறத்தாமல், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளுடன் முன்னெடுத்துள்ள பேச்சும் வரவேற்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதி எம்முடனான பேச்சின்போது, அரச திணைக்களங்களினால் அபகரிக்கப்படும் காணிகள் பற்றி கரிசனை செலுத்தியிருந்தார்.

பொறுப்புக்கூறல் விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல் செய்யப்படாமல் எவ்விதமான எதிர்கால முன்னேற்றங்களையும் காணமுடியாது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு பொறுப்புக்கூறல் நீதியாக முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், சுயாதீனமான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

மேலும், பயங்கரவாத தடைச் சட்ட விடயத்தில் எனது நிலைப்பாட்டுக்கு அமைவான விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசமைப்பில் காணப்படுகின்ற குற்றவியல் சட்டம் மட்டுமே போதுமானதாகும். ஆகவே, பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதோடு, புதிய சட்டமும் அவசியமில்லை என்பதை உயர்ஸ்தானிகர் ஆணித்தரமாக கூறியுள்ளமை வரவேற்கத்தக்கது - என்றார்.

இதேபோன்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கூறுகையில்,

ஐ. நா. உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையானது, மிகக் காட்டமானதாக வெளிவந்துள்ள நிலையில் அதனை நாம் முழுமையாக வரவேற்கின்றோம். மிக முக்கியமாக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் விடயத்தில் அசமந்தமான போக்கைப் பிற்பற்றி வருகின்றமை பகிரங்கமாக உயர்ஸ்தானிகர் தனது வாய்மொழி மூலமான அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதையும், அது நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், புதிய பயங்கரவாத தடைச் சட்டம் சர்வதேச தரங்களைக் கொண்டதாக காண்பிக்கப்படுகின்றபோதும் அதில் பெரும்அடக்குமுறைகள் காணப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார். அது தற்காலிகமாக தாமதப்படுத்தப்பட்டுள்ள போதும் எதிர்காலத்திலும் அது நடைமுறைப்படுத்தப்படக்கூடாது என்பதை குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பொருளாதார முன்னேற்றங்களை காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் கூறுகின்ற போதும், ஜனநாயகத்தை மீறும் வகையில் அடக்குமுறைகள் முன்னெடுக்கப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் கட்சிகளுடன் பேச்சுக்கள் நடைபெறுகின்றபோதும் அதில் திருப்திகரமான நிலைமைகளை அடைவதற்கு அரசாங்கம் போதியளவில் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவில்லை என்பதும், காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளபோதும், அவை திருப்திகரமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் நடைபெற்ற விடயங்களுக்கு பொறுப்புக்கூறப்படாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பது தெளிவாக கூறப்பட்டுள்ளது - என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

53ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐ.நா உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை தொடர்பிலான பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகி நிற்கிறது என்ற விடயம் மிகவும் அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கான உத்திகளில் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தின் செயலற்ற தன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறலின்றி நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பதும் அரசாங்கத்தின் சமகால அடக்குமுறைகள் பற்றியும் குறித்த அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நாம் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையை வரவேற்கின்றோம். ஆனால், குறித்த அறிக்கையில், இலங்கை அரசாங்கத்தின் அனைத்து விதமான செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக இருப்பது, சிங்கள - பௌத்த பேரினவாதம் தான் என்ற விடயம் வெளிப்படுத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் கூறுகையில்,

ஐ.நா. உயர்ஸ்தானிகர் தனது வாய்மூலமான அறிக்கையில், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக கூறிவந்தாலும் பொறுப்புக்கூறுவதற்கு தயாரில்லாத நிலையிலேயே உள்ளது என்பதை வெளிப்படையாக கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, போரின்போதும், அதன் பின்னரும் அரசாங்கம் ஜனநாயக விரோதமான செயல்பாடுகளை முன்னெடுத்து பொதுமக்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிக்கிறது என்பதையும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

உண்மையில், இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவது தொடர்பில் கண்துடைப்புச் செயல்பாடுகளையே முன்னெடுக்கிறது. அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேசத்தை ஏமாற்றும் வகையில் சில பேச்சுகளை முன்னெடுத்து காலங்கடத்துகிறது.

இவ்விதமான பிற்போக்குச் செயல்பாடுகளை முன்னெடுக்கும் அரசாங்கத்தினை இனங்கண்டு ஐ.நா. உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளார்- என்றார்.

(ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று



ஞாயிற்றுக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச்



சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவு



கள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, பொறியியல் பீடத்தின் மின் மற்றும் இலத்திரனியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே. அகிலன் மின் மற்றும் இலத்திரனியல் துறையில் பேராசிரியராகவும் , விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறையில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.06.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் தமிழ் கண்டனங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'அரைவாசி தீர்வு' தொடர்பில் நேற்றைய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனால், ரணிலுக்கு தமிழில் கண்டனம் தெரிவித்துவிட்டு அவற்றை பார்த்துப் புல்லரித்துக் கொண்டிருக்கும் கட்சிகளின் இயலாமை தொடர்பில் நாம் கவனம் கொள்ள வேண்டியிருக்கின்றது. ரணிலை விமர்சிப்பதோடு விடயம் முடிந்துவிடவில்லை. விடயம் அதற்கு அப்பாலானது. அதாவது, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் விடயங்களை பொறுப்போடும் தூரநோக்குடனும் கையாள வேண்டும். வெறுமனே, தமிழ் மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் மட்டும் சிந்திக்கக்கூடாது.

உலகின் சக்திவாய்ந்த பழமைவாத கட்சிகளின் உலகளாவிய கூட்டமைப்பான சர்வதேச ஜனநாயக ஒன்றிய தலைவருடான நேர்காணலின்போது ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த கருத்துகளுக்கு தமிழில் ஒரு சில வார்த்தைகளை கூறிவிடுவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை – ஆகக்குறைந்தது, கொழும்பிலுள்ள தூதரகங்கள்கூட தமிழ் கட்சிகளின் கண்டனத்தை பொருட்படுத்தப் போவதில்லை.

உண்மையில், தமிழ் கட்சிகளின் அணுகுமுறை சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தை நோக்கியதாகவும் சர்வதேச சமூகத்தை நோக்கியதாகவும் இருந்திருக்க வேண்டும். 'ஈழநாடு' ஒரு விடயத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது. தமிழ் மக்களின் கோரிக்கைகள் மற்றும் நிலைப்பாடுகளானது, தமிழ் மக்கள் இலங்கைத் தீவில், ஒரு தரப்பு என்னும் நோக்கில் இருக்க வேண்டும். வெறுமனே, தமிழர்கள் ஒரு தேசம், ஒரு நாடு இரண்டு தேசங்கள் என்றவாறு சுலோகங்களை உச்சரிப்பதால் மட்டும் தமிழர்கள் ஒரு தேசமாகிவிடப் போவதில்லை.

கடந்த 14 வருடங்களாக தமிழர்கள் ஒரு தேசமென்னும் வகையில் செயல்பட்டமைக்கு சான்றுகள் இல்லை. ஒரு நாடு இரண்டு தேசமென்னும் சுலோகத்தை உச்சரித்துக் கொண்டிருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸோ தமிழ் மக்களின் பெருபான்மையான ஆதரவைப் பெற்றிருக்கும் பிரதான தமிழ்த் தேசிய தலைமையான தமிழ் தேசியக் கூட்டமைப்பை முகவர்கள் என்றும் அடிவருடிகளென்றும் கூலிகளென்றும் – தொடர்ந்தும் பொது வெளிகளில் கூறி வருகின்றது. அவர்கள் பிழையானவர்கள் என்றால் அவர்களுக்கு வாக்களித்த மக்கள் யார்? ஒரு தேசமாக திரள்வதென்பது ஓர் அரசியல் நிலைப்பாட்டை நோக்கி மக்கள் திரள்வதாகும் – அத்துடன், அதனை வழிநடத்தும் தலைமைமீது அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் பயணிப்பதாகும். கடந்த 14 வருடங்களில் தமிழ் மக்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை வைக்கக்கூடிய தலைமைகள் தோற்றம் பெறவில்லை. அரசியல் தளத்தில், நேச சக்திகள் அனைத்தையும் – அத்துடன், எதிர்தரப்பில் இருப்போரையும் முடிந்தவரையில் அவரணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் அர்ப்பணிப்பு கொண்டிருக்கும் கட்சியையோ அல்லது நபர்களையோ தமிழ் மக்கள் காணவில்லை. தேசமென்று உச்சரிக்கும் காங்கிரஸ் கட்சியோ முடிந்தவரையில் மற்றவர்களை இழிவுபடுத்தும் செயலையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழர்கள் தேசமாக இருக்கின்றார்கள் – என்பதெல்லாம் வெறும் சுலோகங்கள் மட்டுமே. ஆனால், இங்கு பிரச்னை வேறு. தேசமாக இருக்கின்றோமோ அல்லது இல்லையோ ஆகக் குறைந்தது, தமிழ் மக்கள் ஒரு தரப்பாக இருக்கின்றனர் என்பதையாவது தமிழ் கட்சிகள் தங்களின் செயல்பாடுகளின் மூலம் நிலைநிறுத்த முயற்சிக்க வேண்டும்.

ரணிலின் கருத்துக்கான கண்டனத்தை ஆங்கிலத்தில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்தெழுத்திட்டு சர்வதேச ஜனநாயக ஒன்றியத்துக்கு அனுப்பியிருக்க வேண்டும். இப்போதும்கூட அதனை செய்ய முடியும். அதேவேளை இலங்கைத் தீவில் கரிசனையை வெளிப்படுத்திவரும் இணைத் தலைமை நாடுகள் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கவனத்துக்கு தமிழ் கட்சிகளின் எதிர்ப்பு போய்ச் சேரவேண்டும். இதற்கு ஆதரவாக புலம்பெயர் அமைப்புக்கள் செயலாற்ற வேண்டும். இதன் மூலம்தான் களமும் புலமும் சில விடயங்களில் இணைந்திருக்கின்றன என்பதையும் வெளிப்படுத்த முடியும். இவ்வாறான அணுகுமுறையில் விடயங்கள் நகரும்போதுதான் தமிழர்கள் தேசமென்னும் சொல்லை உச்சரிக்கும் தகுதியைப் பெறமுடியும். தேசமாக இல்லாவிட்டாலும்கூட, மேற்குலகம் வெறுமனே சிங்கள அரசியல் சமூகத்தோடு உரையாடுவதன் மூலம் மட்டும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது – மாறாக, எங்களுடன் பேச வேண்டுமென்னும் அழுத்தத்தையாவது ஏற்படுத்த முடியும். வெறுமனே தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதற்கான அறிக்கைகளால் எவ்வித பயனுமில்லை. அவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவதை விடவும் வெளியிடாமல் இருப்பது நல்லது.

# ஆலய வழிபாடு, குடும்பத்துக்காக விடுமுறை நாட்களை பயன்படுத்துக

## சைவ மகா சபை அழைப்பு

*யாழ்ப்பாணம், ஜூன் 26*

அனைத்து சைவ அமைப்புகளும் வெள்ளி, ஞாயிறு தின விடுமுறையை சிறார்கள் சரிவர ஆலய வழிபாட்டுக்கும் அறநெறிக்கும் குடும்பத்துடன் செலவிடவும் பரப்புரைகளையும் பொறிமுறைகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்று அகில இலங்கை சைவ மகா சபை அழைப்பு விடுத்துள்ளது.

அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பிலே,

நெருக்கீட்டுடனும் அறநெறி பிறழ்ந்து போதைக்கும் விபத்துகளுக்கும் ஆளாகி வரும் இளைய சமுதாயத்தை மீட்டெடுக்கும் முயற்சியின் ஓர் அங்கமான அரச அதிபரின் தலைமைத்துவத்துடன் முன்னெடுக்கப்படும் சிறந்த வேலைத்திட்டத்தை குழப்ப சிலர் முனைந்து வரும் நிலையில் இதற்கு எவரும் இடங்கொடுக்காதவண்ணம் தனியார் கல்வி நிலையங்கள் பெற்றோர் பாடசாலைகள் தொடர் விழிப்புணர்வு ஊட்ட வேண்டும். சம்பந்தப்பட்ட துறைகள் கண்காணிப்பு பொறிமுறைகள் திறம்பட இயங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த செயல்பாடுகள் தரம் 09 கீழேயே நடைமுறைப்படுத்தப்படுவதால் க. பொ. த. சாதாரண தரம், உயர்தரம் மாணவர்களின் மேலதிக கல்வியோ தூர இடங்களிலிருந்து வந்து கற்கும் அந்த பிள்ளைகளின் கல்வியோ பாதிக்கப்படமாட்டாது. பிரத்தியேக வகுப்புக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு வருவதால் இந்த நேரத்தில் அவை நடாத்தும் சாத்தியப்பாடுகள் இல்லாதொழிக்கப்படும் என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

கல்வி என்பது வாழ்வதற்கான விழுமியங்களை கற்று தரும் மனிதனின் அடிப்படை விடயம் என்பதால் அதில் ஈடுபட்டுள்ள சகலரும் அறத்தையும் உண்மைத் தன்மையும் கடைப்பிடித்தல் அத்தியாவசியமானது என்பதையும் அதுவே மாணவருக்கு சிறந்த முன்மாதிரியை வழங்கும் என்பதை ஆழமாக உள்வாங்க வேண்டும்.

இத்திட்டத்தை வலுப்படுத்தும் பிரதேச செயலக ரீதியான பரப்புரைகள் செயற்பாடுகளில் பங்குகொள்ள விரும்புவோர் எமது வெள்ளிக்கிழமைப் பக்திப் பேரியக்கத்துடன் இணையுமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் எழு நாட்களும் தனியார் கல்வி நிலையங்களினால் நடத்தப்படும் கற்றல்,கற்பித்தல் செயல்பாடுகளை வரும் ஜூலை முதலாம் திகதி முதல் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்துவதற்காக யாழ் மாவட்ட செயலகத்தால் தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிநேகபூர்வ விளையாட்டு போட்டி!

*யாழ்ப்பாணம், ஜூன் 26*


கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டை ஒட்டி கலாசாலைக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ விளையாட்டு போட்டி நிகழ்வு நாளை செவ்வாய் காலை 8.30 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளினதும் உடலாளர் மன்ற ஏற்பாட்டில் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் ஆசிரிய கலாசாலை அதிபர் ச. லலீசன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி செல்வி நி. நல்லையா திருமதி ஜெ. தியாகலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக லயன் டாக்டர் வை. தியாகராஜாவும் கலந்துகொள்வர்.

விரிவுரையாளர்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டம் மற்றும் எல்லே மாணவர்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஐ)

# மறைந்த மருத்துவர் சாரங்கனின் 'வாழ்க்கை' கவிதை நூல் வெளியீடு




*கொழும்பு, ஜூன் 2*


மருத்துவர் அமரர் வேல் சாரங்கனின் "வாழ்க்கை" கவிதை நூல் நேற்று முன்தினம் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

சாரங்கனின் "வாழ்க்கை" கவிதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு சாரங்கனின் 31ஆம் நாள் நினைவு தினமான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பலாலி வீதி கோண் டாவிலில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற ஆத்மசாந்தி பிரார்த்தனை நிகழ்வின்போது நடைபெற்றது.

மருத்துவர் வேல் சாரங்கன் மே 25ஆம் திகதி இயற்கை எய்தியிருந்தார்.

இந்த நிலையில் சாரங்கனால் எழுதப்பட்டு தொகுக்கப்படாத கவிதைகளை தொகுத்து "வாழ்க்கை" எனும் கவிதை தொகுப்பாக சாரங்கனுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் (2004 உயர்தரம்) கல்வி கற்ற நண்பர்கள் சாரங்கனுக்கு சமர்ப்பணம் செய்திருந்தனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனைத் தீர்க்க புது வழியை யோசிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
வியாபாரத்தில்அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக்கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வெற்றி தரும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த பிணக்குகள் நீங்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. பிரச்சினைகள் வந்து நீங்கும்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**விருட்சிகம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பிள்ளைகள் உங்களின் சொல்படி நடப்பார்கள். உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

# பா. ஜ. கவுக்கு பெரும்பான்மை கிட்டினால் அரசமைப்பு சட்டம் மாற்றப்படும் அபாயம்!

## கனிமொழி எம். பி. தெரிவிப்பு



*சென்னை, ஜூன் 26*

பா. ஜ. கவுக்கு பெரும்பான்மை கிடைத்தால் அரசமைப்பு சட்டம் மாற்றியமைக்கப்படும் அபாயம் இருப்பதாக கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்தியில் ஆளும் பா. ஜ. கவால் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது மக்கள் மட்டுமல்ல, அரசமைப்பு சட்டமும் என்றால் அது மிகையில்லை. அவர்கள் கொண்டாடும் தீன்தயாள் உபாத்யாய், சவார்க்கர் ஆகியோர் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது அதைக்கண்டித்தவர்கள். இந்த சட்டங்களை மாற்ற வேண்டுமானால் தேசிய அளவிலும் மாநில அளவிலும் பெரும் பான்மை தேவை. தற்போது நாடாளுமன்றத்தில் எந்தவித விவாதமும் நடத்தப்படுவதில்லை.

எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தபோதும் சட்ட மசோதாவை நிறைவேற்றும் அளவுக்கு பா. ஜ. கவுக்கு பெரும்பான்மை இருக்கிறது. இதே பெரும்பான்மை மீண்டும் கிடைத்துவிட்டால், நினைத்த நேரத்தில் எதை வேண்டுமானா லும் மாற்ற முடியும். அரசமைப்புச் சட்டத்தையும் மாற்றும் அபாயம் இருக்கிறது.

சாதிப் பெயரால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதை ஒழிக்க வேண்டும் என்பதற்கான தொடக்கமாகவே பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சில துறைகளைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தலாம் என நினைக்கின்றனர். தி. மு. கவை யாரும் அச்சுறுத்த முடியாது - என்றார். (ஐ)

# தமிழகத்தை காப்பாற்ற முடியாதவர் பிரதமரை உருவாக்க போகிறராம்!

## எடப்பாடி பழனிசாமி எள்ளிநகை

*மேட்டூர், ஜூன் 26*

தமிழகத்தை காப்பாற்ற முடியாத முதல்வர் ஸ்டாலின் பீஹார் சென்று அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து பிரதமரை உருவாக்குகிறாராம் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர்,

"இந்தியாவில் அதிக தார் சாலை கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான். கிராமத்தில் பேருந்து போக்குவரத்துக்கான சாலைகளை தார் சாலைகளாக மாற்றினோம். கிராம், நகரம் என அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்றப் பிறகு, அ. தி. மு. க. கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்தையும் ரத்து செய்கின்ற காட்சியைத் தான் சாதனையாக பார்க்கிறோம்.

கூரை ஏறி கோழி பிடிக்காதவன், வானம் ஏறி வைகுண்டம் போனான். அதுபோல், தமிழகத்தை காப்பாற்ற முடியாத ஸ்டாலின், பீஹார் சென்று சர்வகட்சித் தலைவர்களுடன் சேர்ந்து நாட்டின் பிரதமரை உருவாக்கிறாராம்.

செந்தில் பாலாஜி தமிழகத்தில் மதுபான கடைகள் மூலம் ஒரு நாளைக்கு 10 கோடி ரூபாய் என வருடத்துக்கு 3,600 கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளார். இதற்குதான் மத்திய அரசாங்கம் அவரை கைது செய்தது - என்றார். (ஐ)

# சிதம்பரம் நடராஜர் கோவில் தேர் திருவிழா சிறப்புற நடந்தது

## பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

*கடலூர், ஜூன் 26*

உலகப் பிரசித்தி பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவிலில் தேரோட்டம் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்தனர்.

சிதம்பரம் நடராஜர் கோவில் ஆனி திருமஞ்சன தரிசன விழா கொடியேற்றம் கடந்த 17ஆம் திகதி நடந்தது. இதில் மேள தாளம் முழங்கிட வேத மந்திரங்கள் ஓதிட, தேவாரம், திருவாசகம் பாடிட உற்சவ ஆச்சாரியார் குருமூர்த்தி தீட்சிதர், கோவில் கொடி மரத்தில் கொடியேற்றனார்.

மூலவர்களான நடராஜ மூர்த்தி, சிவகாமசுந்தரி மற்றும் உற்சவர்கள் சுப்பிரமணியர், விநாயகர், சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் மேளதாளம் முழங்கிட, வேத மந்திரங்கள் ஓதிட, தனித்தனி தேர்களில் நேற்று அதிகாலை எழுந்தருளினர். பின்னர் கீழவீதி தேரடி நிலையிலிருந்து 8 மணிக்கு தேர்கள் புறப்பட்டன.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய என கோஷங்களை எழுப்பியவாறு வடம் பிடித்து தேர்களை இழுத்தனர். தெற்குவீதி,



மேலவீதி, வடக்குவீதி வழியாக தேர்கள் ஒன்றன்பின் ஒன்றாக நேற்று மாலை கீழவீதி தேர் நிலையை அடையும். நான்கு வீதிகளிலும் மண்டகபடிதாரர்கள் சுவாமிகளுக்கு சிறப்பு படையல் செய்தனர்.

தேர்களுக்கு முன்பு வீதிகளில் இந்து ஆலய பாதுகாப்புக்குழுவினர், தில்லைத் திருமுறைக்கழகம், அப்பர் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சிவனடியார்கள் மற்றும் திரளான பெண்கள் வீதிகளை நீரினால் கழுவி கோலமிட்டு உழவாரப்பணி மேற்கொண்டனர். சிவனடியார்கள் சிவ நடனம் ஆடியபடி சென்றனர். தேர்களுக்கு முன்பாக ஓய்வு பெற்ற ஆசிரியர் பொன்னம்பலம் தலைமையில் சந்திர பாலசுப்பிரமணியன் முன்னிலையில் ஓதுவார்கள் திருமுறை இன்னிசை ஆராதனையை நிகழ்த்திச் சென்றனர். பெண்கள் கும்மியடித்து சென்றனர். திருவிளக்கு முன்பு சிவ பக்தர்கள் சிவ வாத்தியங்களை முழங்கி நடனமாடி சென்றனர்.

இன்று திங்கட்கிழமை ஆனி திருமஞ்சன தரிசன விழா நடைபெற உள்ளது. (ஐ)

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு பெரமுன ஆதரவா?

## அடியோடு மறுக்கிறார் மகிந்த

**கொழும்பு, ஜூன் 26**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளார் என்று வெளியான கருத்துக்களைத் திட்டவட்டமாக மறுத்துள்ளார் பெரமுனவின் தலைவரான மகிந்த ராஜபக்ஷ.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னமும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை. தேர்தல் அறிவிப்பு வெளிவராத நிலையில் அது தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது பயனற்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பெரமுனவின் நிலைப்பாடாக சிலர் வெளியில் தெரிவிக்கும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளார் என்று அமைச்சர்கள் சிலர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பெரமுனவின் நிலைப்பாடு அல்ல.



பெரமுனவின் தலைவரான என்னால் வெளியிடப்படாத கருத்துக்களைக் கட்சியின் கருத்து என்றோ அல்லது எனது கருத்து என்றோ எவரும் கொள்ளவேண்டாம் - என்றார். (அ)

# பிரபல பாடசாலைக்கு அண்மையில் போதைப்பொருள் விற்றவர் கைது!

கொழும்பு, ஜூன் 26

பாதுக்க நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்கு அருகாமையில் உள்ள வாடகை வீடொன்றில் இருந்து கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த நபர் ஒருவர் கஞ்சா மற்றும் போதைப்பொருளுடன் நேற்று கைது செய்யப்பட்டார் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விஷேட பிரிவின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படை தலைமையக முகாமின் சுற்றிவளைப்புப் பிரிவினரால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு கிலோ 170 கிராம் கஞ்சா மற்றும் 100 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட 35 வயதுடைய சந்தேக நபர், பாதுக்க மில்லவ பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், அவர் பல தடவைகள் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சிறைச்சாலையில் இருந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஹோமாகம, இங்கிரிய, பாதுக்க, அதுரகிரிய, ஹொரண, முதலான இடங்களில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பாதுக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# 9 நாள்களில் மட்டும் 9,000 விண்ணப்பங்கள்

கொழும்பு, ஜூன் 26

கடந்த 9 நாட்களில் கடவுச்சீட்டுக்கான இணையத்தளத்தில் சுமார் 9,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

திணைக்களம் ஜூன் 15 ஆம் திகதி கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை வெளியிட்டது. விண்ணப்பதாரர் தங்கள் கை ரேகையினை பதிவு செய்ய நியமிக்கப்பட்ட 51 பிரதேச செயலக அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றைப் பார்வையிடவேண்டும். இணையவழி அல்லது இலங்கை வங்கிக் கிளைக்குச் சென்று பணம் செலுத்தலாம்.

இணையவழி பயன்பாடுகள் மூலம் இரண்டு வகையான சேவைகள் கிடைக்கின்றன. அவசர சேவைக்கு ரூ. 15,000 மற்றும் கடவுச்சீட்டு 3 நாட்களுக்குள் கூரியர் மூலம் அனுப்பப்படும். சாதாரண சேவையின் மூலம், கடவுச்சீட்டு 14 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படும். அதற்கு ரூ. 5,000 ரூபாவும் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் சேவை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 26

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு இரண்டாவது தடவையும் சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரது சேவைக்காலம் இன்றுடன் முடிவடைகிறது.

புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் அரசியலமைப்புச் சபைக்கு இதுவரை பெயர் சிபார்சு செய்யப்படவில்லை.

அத்துடன் அரசியலமைப்புச் சபை இன்று கூடுவதற்கான தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் விரைவாக மேற்கொள்ளப்படமாட்டாது.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன கடந்த மார்ச் 26 அன்று ஓய்வு பெறவிருந்தார். எனினும், அவருக்கு மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸில் போதியளவு சம்பளம் இல்லை

## விமானிகள் அறிக்கை

கொழும்பு, ஜூன் 26

சிறிலங்கன் ஏர்லைன்ஸின் 70 இற்கும் மேற்பட்ட விமானிகள் போதிய சம்பளம் இல்லாத காரணத்தால் பணியை விட்டு விலகியுள்ளதாக விமான நிறுவனத்தின் விமானிகள் தெரிவித்துள்ளனர்.

தென்கொரியாவுக்குச் செல்லவிருந்த இலங்கைப் பணியாளர்கள் குழுவொன்று, விமானம் தாமதமானதால் அந்த வாய்ப்பை இழந்த சம்பவம் தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான யு-எல் 470 விமானம் தாமதமானதால், தென்கொரியாவுக்கு செல்லவிருந்த இலங்கைப் பணியாளர்கள் குழுவொன்று அந்த வாய்ப்பை அண்மையில் இழந்ததுடன், பின்னர் இது தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனமும் ஈர்க்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானிகள் இந்த சம்பவம் தொடர்பில் நேற்று ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

சிறிலங்கன் ஏர்லைன்ஸ் விமானிகளுக்கு போதிய சம்பளம் வழங்காததால், கடந்த ஒரு வருடத்தில் 70இற்கும் மேற்பட்ட விமானிகள் ஏற்கனவே வேலையை விட்டு விலகியுள்ளதாகவும், மற்றொரு குழு விலக உள்ளதாகவும் அவர்கள் காட்டியுள்ளனர்.

விமான நிறுவனத்தில் 330 விமானிகள் இருக்கவேண்டியிருந்தாலும், விமான நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால், தற்போது 250 விமானிகள் மட்டுமே சேவையில் உள்ளனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, தற்போது விமானிகளின் பற்றாக்குறை நிலவுவதால், இதுபோன்ற அவசர காலங்களில் விமானிகளை நியமிப்பது கடினம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அம்பலாங்கொடை நகரத்தில் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி

கொழும்பு, ஜூன் 26

அம்பலாங்கொடை நகரில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அம்பலாங்கொடை-ரன் தொம்பே பகுதியை சேர்ந்த 56 வயதான ஒருவரே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# இஸ்ரேலில் தாதியர் வேலைகளுக்காக வெளியாருக்கும் பணம் செலுத்தாதீர்!

## வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

இஸ்ரேலில் தாதியர் வேலைகளுக்காக எந்தவொரு வெளித் தரப்பினருக்கும் பணம் செலுத்த வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

இலங்கை மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக மாத்திரமே இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் தாதியர் வேலைவாய்ப்புகள் உள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு பெற்ற மற்றுமொரு குழுவினர் இன்று திங்கட்கிழமை இஸ்ரேல் செல்லவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி முதல் இஸ்ரேலில் தாதியர் துறையில் 389 இலங்கையர்கள் பணி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்கள் கடும் அவதி

## இரத்த சுத்திகரிப்பு கருவிகள் இல்லாமையால்

கொழும்பு, ஜூன் 26

கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களின் இரத்தத்தை சுத்திகரிக்கும் கருவிகள் (இரத்த கசிவு வடிகட்டி) இன்மையால் நூற்றுக்கணக்கான சிறுநீரக நோயாளர்கள் அவதிப்படுகின்றனர்.

இந்நிலைமையால் கராப்பிட்டிய வைத்தியசாலையின் கிளினிக்குகளுக்கு இரத்த சுத்திகரிப்புக்காக வந்து உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நூற்றுக்கணக்கான சிறுநீரக நோயாளர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

சில நோயாளிகளின் இரத்தத்தை ஐந்து நாட்களுக்கு ஒருமுறையும், சில நோயாளிகளின் இரத்தத்தை இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும் சுத்தப்படுத்த வேண்டும் என நோயாளிகளின் உறவினர்கள் கூறுகின்றனர்.

பணத்திற்குக் கூட எந்த மருந்தகத்திலும் இந்த கருவிகள் இல்லை என்றும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பில் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஹரஷனி உபசேகரவிடம் கேட்ட போது, உபகரணப் பற்றாக்குறையால் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாத்திரமன்றி ஏனைய வைத்தியசாலைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், நாடளாவிய ரீதியில் உபகரணப் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிவித்தார். (அ)

# மின்சாரக் கட்டணத் திருத்தம் குறித்து மக்கள் கருத்தறியும் அமர்வு விரைவில்

கொழும்பு, ஜூன் 26

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக சிறப்பு பொது கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட உள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் மக்கள் கருத்தறியும் அமர்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின் கட்டண உயர்வு அல்லது குறைப்பு தொடர்பாக பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பு உள்ளது.

தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் உட்பட எவருக்கும் இதற்கான கருத்துக்களை வழங்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் மற்றும் ஏனையவை தொடர்பில் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்திருந்தார். (அ)

# இடிந்துவிழும் ஆபத்தில் அடுக்குமாடி கட்டடங்கள்

கொழும்பு, ஜூன் 26

கொழும்பு மாநகர சபையில் உள்ள 8 அரச அடுக்குமாடி குடியிருப்புகள் பாரியளவில் பாழடைந்து காணப்படுவதால், அந்த வீடுகளில் வசிக்கும் மக்களின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அந்த வீட்டுத் தொகுதிகளை இடித்துத் தள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாசந்த அடுக்குமாடித் திட்டம், பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டம், வேல்ஸ் குமார மாவத்தை வீடமைப்புத் திட்டம், சிறிதம்மா மாவத்தை வீடமைப்புத் திட்டம், கந்தபுர அடுக்குமாடித் திட்டம், பி 36 மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டம், ஜி. எச். ஜே. கே. எம். வீடமைப்புத் திட்டம் மற்றும் என் மிஹிந்து மாவத்தை வீடமைப்புத் திட்டம் ஆகிய எட்டு வீட்டுத் தொகுதிகள் இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ அதிகார சபை அந்த வீட்டுத் தொகுதிகளை இடித்துத் தள்ளுமாறு வீடமைப்பு அமைச்சிடம் முன்மொழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சமுர்த்தி உள்ளிட்ட நிவாரண திட்டங்கள் அரசியலுக்காக கொண்டுவரப்பட்டவை!

## டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 26

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கான உதவித்திட்டங்கள் அரசியல் நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதால் அவற்றின் இலக்குகளை அடைய முடியவில்லை என சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த நிலையினுள் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள அஸ்வெசும நிவாரண செயற்திட்டம் பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ள அதேவேளை இத்திட்டத்திற்கு எதிராக கடும் எதிர்ப்புகள் வெளிவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாவல பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

பொருளாதார பாதிப்பால் பலர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் குறித்த நிவாரண திட்டம் சமூக கட்டமைப்பில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

மக்களின் ஏழ்மையில், அஸ்வெசும நிவாரண செயற்திட்டம் கொண்டுவரப்படுவதாகவும் இந்த உதவித் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களை நேரடியாக குறிவைக்கிறதா என்பது சந்தேகமே.

மேலும் பொருளாதார ரீதியில் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி, தேர்தல் ஒன்று அவசியமில்லை என மக்களே குறிப்பிடும் நிலையை தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம்-என்றார். (அ)

# வெலிக்கடை சிறையிலிருந்து தப்பிய கைதி மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, ஜூன் 26

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மரண தண்டனை கைதியொருவர் நேற்றுச் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடையை ஒத்த ஆடைகளை அணிந்து சிறையிலிருந்து தப்பிக்க முயன்றுள்ளார்.

சிறையிலிருந்து வெளியேறி மருதானை ரயில் நிலையத்துக்கு சென்ற ரயிலில் ஏறி தப்பிச் செல்ல முயன்றபோது, அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த கைதி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் சமய நிகழ்ச்சிக்காக சிறைக் கூண்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர் கவனமாக அங்கிருந்து தப்பிச் சென்று சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடையை ஒத்த ஆடை அணிந்து கொண்டு, காவலர்களுக்கு தவறான தகவல்களைக் கூறி, பிரதான வாயிலின் ஊடாக தப்பிச் சென்றுள்ளார்.

அவரது நடத்தையில் சந்தேகமடைந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், அவரை விரட்டிச் சென்றனர். மருதானை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலில் நின்றுகொண்டிருந்த சந்தேக நபரை கைது செய்தனர்.

இவர் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் கம்பஹா மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த கைதி பன்னல வாவெகொடுவ, உலகொடுவெல்ல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த கைதியை வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து உயர் பாதுகாப்பு சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கூறினார். (அ)

# கொழும்பில் இருந்து வெளியேறவேண்டாம்

## அமைச்சர்களுக்கு அவசர அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

**ஆளும் கட்சியினருக்கு அதிரடி கட்டுப்பாடு விதித்துள்ளது ஆளும் கட்சியின் பிரதம கொறாடா காரியாலயம். இது தொடர்பில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சகலருக்கும் வட்ஸ்அப் ஊடாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

அந்த கட்டுப்பாட்டின் பிரகாரம், கொழும்புக்கு வெளியே செல்லவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், உரிய காரணங்கள் எவையும் அந்த அறிவுறுத்தலில் குறிப்பிடப்படவில்லை.

கடன் மறுசீரமைப்பு பிரேரணை பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படவுள்ள நிலையில், அரசாங்க அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் கொழும்பில் தங்கியிருக்குமாறு கூறப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டிய அவசர தேவையாக கருதி பாராளுமன்றத்தை எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை கூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஆளும் கட்சி அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் இவ்வாரம் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கக் கட்சி பிரதம அமைப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

லண்டனுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு வந்தையடுத்து, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக ஆளும் கட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூன்

மங்களகம கனுவ பிரதேசத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி பெண்ணொருவர் உயிரிழந்தார் என மங்களகம பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பிள்ளைகளின் தாயான டி.எம்.இந்திரவதி (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் தனது தோட்டத்துக்குச் சென்றதாகவும், அங்கு காட்டு யானை இருப்பதை அறிந்ததும், உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடியபோதும் யானை தாக்கியதில் அவர் உயிரிழந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பிரித்தானிய எம்.பிக்களிடம் அறிக்கை

லண்டன், ஜூன் 26



தென்னாபிரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான வேலைத் திட்டத்தின் தலைமையில், இலங்கையில் ஜனநாய கத்துக்கான ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் ஆகிய மனித உரிமைக்கள் அமைப்புகள் இணைந்து, இலங்கையில் மூடி மறைக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் பற்றிய ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

பாரிய புதைகுழிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி நிற்கும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் இந்த அறிக்கை வெளியானது.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இந்த அறிக்கையின் பிரதிகளை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்தனர். இந்த சந்திப்புக்களின்போது, இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பாரிய மனித புதை குழிகள் தொடர்பான விடயங்களை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணாமலாக் கப்பட்டவர்களின் உறவினர்கள் தெளிவுபடுத்தினர்.

இந்த ஆய்வு அறிக்கையை பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புலம்பெயர் உறவினர்களின் வேதனைகளை அக்கறையுடன் கேட்டதுடன் மேலும் இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதாகவும் வாக்களித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரித்தானியா வாழ் உறவினர்களின் சங்கத்தின் சார்பில் விஜய் விவேகானந்தன், டிலக்ஷன் மனோரஜன், லக்ஸ்மன் திருஞானசம்பந்தர், நிலஜன் சிவலிங்கம், சாருப்பிரியன் சிறிஸ்கரன், புகழினியன் விக்டர் விமலசிங்கம், மாதவ மேஜர் வேலுப்பிள்ளை, ரோய் ஜக்ஷன் யேசுதாசன், சுபதர்ஷா வரதராசா, சுபமகிஷா வரதராசா ரஞ்சனி பாலச்சந்திரன், செல்வகுமாரி லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகின் காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்குகளை அதிகமாக கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு இடமளிக்கப்படாது தடை செய்யப்படுகின்ற விடயமானது பாரிய மனித புதை குழியின் வெளிப்படை தன்மையை அவலங்களை முழுமையாக மறைக்கின்ற செயல்பாடாகவே பார்க்கப்படுகின்றது என இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (அ)

# அரசாங்க வைத்தியசாலைகளை நிர்வகிப்பதில் பெரும் நெருக்கடி!

## வைத்தியர்கள் ஓய்வு, மருந்து தட்டுப்பாடு காரணம்

கொழும்பு, ஜூன் 26

**இம்மாத இறுதியில் 60 வயதை கடந்த பெருமளவான வைத்தியர்கள் ஓய்வுபெற வுள்ளதாலும், மருந்து வாங்க போதிய நிதியின்மை மற்றும் மருந்துத் தட்டுப்பாடு காரண மாகவும் அரசாங்க வைத்தியசாலையின் செயற்பாடுகள் கடும் நெருக்கடிக்கு உள் ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயது 60 ஆக வரைய றுக்கப்பட்டுள்ளதால், 200 சிறப்பு மருத்துவர்கள், 200 பொது மருத்துவர்கள், 250 அரசுப் பதிவு மருத்துவர்கள், 50 பல் மருத்துவர்கள் இம்மாதம் 30ஆம் திகதியுடன் ஓய்வுபெற வுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதிவு செய்யப்பட்ட வைத் தியர்கள் 650 பேர் பிராந்திய வைத்தியசாலைகளில் பணிபுரி வதாகவும், அவர்களில் சுமார் 350 பேர் இம்மாதம் 30 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளமையி னால் அந்த வைத்தியசாலை களை நடத்துவது பாரிய பிரச் சினையாக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, மருத்துவர்களுக் கான வயது வரம்பை 63 ஆக நீட்டித்து சுற்றறிக்கை வெளியி டப்பட்டது. பின்னர் அரசு கொள்கை முடிவின் அடிப் படையில் சுற்றறிக்கையை ரத்துச் செய்தது.

புதிய சுற்றறிக்கையை இரத்துச் செய்யவும், வயதை 63 ஆக அதிகரிப்பதற்கான சுற்ற றிக்கையை மீள அமுல்படுத்த வும் விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள், பல் வைத்தி யர்கள் மற்றும் அரசில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் அடங்கிய குழு நீதிமன்றத்துக் குச் சென்றுள்ளதுடன், தற்போது அது நீதிமன்றில் ஆராயப்பட்டு வருகின்றது.

இதேவேளை, பயிற்சியை நிறைவு செய்த சுமார் 1400 வைத்தியர்களுக்கு கடந்த ஏப்ர லில் பயிற்சியின் பின்னரான நியமனங்கள் வழங்கப்பட்டிருந் ததுடன், சுமார் 300 வைத்தியர் களுக்கு நியமனக் கடிதங்கள் கிடைக்கவில்லை எனவும் அறியமுடிகின்றது.

நியமனத்தை ஏற்காத பலர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது. இதேவேளை, நாடு முழுவதிலும் உள்ள வைத் தியசாலைகளில் பல வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள் ளனர்.

மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையால், முக்கிய அறுவைச் சிகிச்சைகளைக்கூட நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நோயாளிகள் கூறுகின்றனர்.

வைத்தியர் பற்றாக்குறை மற்றும் மருந்துப் பற்றாக்குறை தொடர்பில் சுகாதார அமைச் சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தாவிடம் சிங்கள ஊடகமொன்று கேள்வியெழுப் பிய போது, வைத்தியர்கள் மற்றும் அத்தியாவசிய மருந்து களின் பற்றாக்குறை வைத்திய சாலையை நடத்துவதற்கு பாரிய பிரச்னையாக மாறியுள் ளதாக குறிப்பிட்டார். (அ)





## ரவிராஜின் ஜனன தினம் அனுஷ்டிப்பு

கொழும்பு, ஜூன் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் 61ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு சாவகச் சேரியில் அமைந்துள்ள அன் னாரது உருவச் சிலைக்கு நேற்று மலர் மாலை அணிவித்து சுடரேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் சசிகலா ரவிராஜ், சமூக செயற்பாட்டா ளர் க. அருந்தவபாலன், சே. கலையமுதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஜனாதிபதி ரணிலின் தலைமையின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவேண்டும்

## வஜிர அபேவர்த்தன அழைப்பு

கொழும்பு, ஜூன் 26

“அடுத்த ஜனாதிபதித் தேர்த லில் ரணில் விக்கிரமசிங்கவே பொதுவேட்பாளராகக் கள மிறங்கவுள்ளார். எனவே, அவரு டைய தலைமையின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்” - என்று ஐக்கிய தேசி யக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவே பொதுவேட் பாளராகக் களமிறங்கவுள்ளார். பொதுஜன பெரமுனவில் உள்ளவர்களில் 90 வீதமான வர்கள் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்கு வதையே விரும்புகின்றனர்.

ராஜபக்ஷக்களில் எவரும் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதை மக்கள் விரும்ப மாட்டார்கள். கடந்த வருடம் இடம்பெற்ற



சம்பவங்களை எவரும் மறக்கா மல் இருந்தால் நல்லது. ரணில் விக்கிரமசிங்கவைப் பலப் படுத்த அனைவரும் கட்சி வேபாடின்றி இணைய வேண் டும் - என்றார். (அ)

# வீடுகளில் ஏற்படும் விபத்துக்கள் நாட்டில் பெருமளவில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 26

தற்போது வீடுகளில் ஏற் படும் விபத்துக்கள் பெருமள வில் அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக சிறு பிள்ளை கள் மற்றும் முதியோர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதி கரித்து காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க தெரி வித்தார்.

குறிப்பாக சிறு குழந்தைகள் வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழப்பதாகவும், முதியவர் கள் குளியலறையில் வழுக்கி விழுவதால் ஏற்படும் விபத்து களால் உயிரிழப்பதாகவும் அவர் கூறினார்.

வீட்டைச் சுத்தம் செய்ய செல்லும்போது பாம்பு கடித் தல் போன்ற காரணங்களாலும் இந்த விபத்துகள் ஏற்படுவதாக வும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2019 ஆம் ஆண்டில், வீடுகளுக்கு அண்மையில் இவ் வாறான விபத்துக்கள் ஏற்பட்ட போதிலும் கொவிட் 19 தொற்று நோயுடன், வீடு களில் மக்கள் தங்கியிருப்பதால் இந்த விபத் துக்கள் படிப்படியாக அதிக ரித்ததாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக குடும்ப வன்முறை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பற்ற இடங்கள் அதிகரிப்பு, மின்சுற்றுகளை முறையாகப் பொருத்தாமை, பெற்றோர்களின் கவனக் குறைவு, அனாவசியமாக பாத்தி ரங்களில் தண்ணீர் வைப்பது போன்றவையும் இதற்கான முக்கிய காரணங்கள் என வைத் தியர் சுட்டிக்காட்டினார்.

# அரசாங்கத்தின் நிவாரணத்தில் மோசடிகள் மேன்முறையீடு செய்யவும் வாய்ப்பில்லை!

## மொட்டுக்கட்சி எம்.பி. காட்டம்

கொழும்பு, ஜூன் 26

குறைந்த வருமானம் பெறு கின்ற வறுமைக்கோட்டிற்குட் பட்ட மக்களுக்கான முறை யான நிவாரணத் திட்டத்தை அரசாங்கத்தினால் முன்னெ டுக்க முடியவில்லை என பொது ஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குற்றம் சுமத்தி யுள்ளார்.

அரசாங்கம் ஆரம்பித்துள்ள நிவாரணத் திட்டத்தில் உள் வாங்கப்படாதவர்கள் மேன் முறையீடு செய்வதற்கு எந்த வொரு வாய்ப்பும் இல்லை என சந்திம வீரக்கொடி சுட்டிக் காட்டினார்.

நிவாரணத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்படாத தகுதி யுடைய குறைந்த வருமானம் உடையவர்கள் இருந்தால், மேல்முறையீடு செய்யலாம் என அரசாங்கம் கூறினாலும் அதற்கு வாய்ப்பில்லை என்று, சம்பந்தப்பட்ட அரச அதிகாரி கள் கூறுவதாகவும் சந்திம வீரக்கொடி மேலும் கூறினார்.

எனவே அரசாங்கம் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சந்திம வீரக்கொடி வலியுறுத்தினார். (அ)

# சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்குவதில் தாமத நிலை

கொழும்பு, ஜூன் 26

சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படு வதற்கு பிரதான காரணம் மோட்டார் போக்குவரத்து திணைக் களத்தில் தற்போதுள்ள அச்சிடும் இயந்திரங்களின் போதிய அச்சிடும் திறன் இல்லாததே என அதன் ஆணையாளர் நாயகம் நிஷ ாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வாறான குறைபாடுகள் இருப்பது நாம் அறிந்ததே. அந்த வகையில், சாரதி அனுமதி அட்டை அச்சிடும் இயந்திரங்களை கொள் வனவு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தற்போது ஐந்து இயந்திரங்கள் மாத்திரமே அச்சிடுவதோடு, அவை தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை.

அட்டைகள் இல்லாததாலும், போதிய அச்சு இயந்திரங்கள் இல்லாததாலும் மொத்தம் 800,000 அட்டைகள் வழங்குவது இன் னும் நிலுவையில் உள்ளது.

தற்காலிக சாரதி அனுமதி அட்டை வழங்குவதை நிறுத்தவேண்டு மானால், நாளொன்றுக்கு 4,000 அட்டைகளுக்கு மேல் அச்சிட வேண்டும் - என்றார். (அ)

# அரச காணிகளுக்காக புதிய திட்டம்

கொழும்பு, ஜூன் 26

அரச காணிகளை அபிவி ருத்தி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கும் புதிய திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப் படவுள்ள தாக காணி சீர்திருத்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 15 நாட்களில் அதற்கான புதிய திட்டமொன்று அறிமுகப் படுத்தப்பட வுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் நிலந்த விஜேசிங்க தெரிவித்தார்.

நில அளவைப் பணிகளை நிறைவு செய்த தமது ஆணைக் குழுவின் கீழ்வரும் 57 ஆயிரம் காணிகளுக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் நிலந்த விஜேசிங்க கூறினார். (அ)

# அமெரிக்காவில் மோடிக்கு ஜோ பைடன் அதிக முக்கியத்துவம் தருவது ஏன்?

## அமெரிக்க ஊடகங்களின் அலசல்

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம் உலகம் முழுவதும் சர்வதேச ஊடகங்களில் பெரிய அளவில் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

குறிப்பாக, அமெரிக்க ஊடகங்களில் மோடியின் பயணம் சிறப்புக் கவனம் பெற்றுள்ளது. அமெரிக்க அரசின் விருந்தினராக மோடி அமெரிக்காவுக்கு செல்வது இதுவே முதல் முறை.

கடந்த வாரம் வியாழக்கிழமையன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரையாற்றியுள்ளார். இந்தியப் பிரதமர் என்ற வகையில் இரண்டாவது முறையாக அமெரிக்க நாடாளுமன் றத்தில் அவர் உரையாற்றியுள்ளார். இவ்வாறு அமெரிக்க நாடாளுமன்றத்தில் 2 முறை உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றுள்ளார்.

பிரதமர் மோடியின் வருகை குறித்து அமெரிக்க ஊடகங்களின் பார்வை கலவையானதாக இருக்கிறது. அமெரிக்க நாடாளுமன்றத்தில் மோடியின் உரையை அந்நாட்டு எம்.பி.க்கள் பலரும் புறக்கணித்த செய்திக்கு அந்நாட்டு ஊடகங்கள் பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

அதுதவிர, இந்தியாவில் சிறுபான்மையினர் நிலை தொடர்பான கேள்விகள், ஜனநாயகம் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறை ஆகியவை குறித்தும் அமெரிக்க ஊடகங்கள் பிரதானமாகக் கேள்வி எழுப்பியிருந்தன.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் மோடியின் உரையை ஆளும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 6 எம்.பி.க்கள் புறக்கணித்தனர். மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த ரஷிதா தலிப், மிசௌரியை சேர்ந்த கோரே புஷ், மின்னசோட்டாவை சேர்ந்த இலான் ஒமர், நியூயார்க்கை சேர்ந்த ஜமால் போவ்மென் ஆகியோர் மோடி உரையைப் புறக்கணித்தனர். மோடிக்கு எதிராக அவர்கள் நால்வரும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தனர்.

“தி நியூயார்க் டைம்ஸ்” பத்திரிகை அவர்களது கூட்டறிக்கைக்குப் பிரதான இடம் ஒதுக்கியிருந்தது.



“அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்திய பிரதமர் மோடி உரையாற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதன் மூலம் மத சிறுபான்மையினர் மற்றும் பத்திரிகையாளர்களின் குரல்கள் பலவீனமாக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் லாபத்திற்காக நாம் ஒருபோதும் மனித உரிமைகளைத் தியாகம் செய்ய முடியாது,” என்று அந்த அறிக்கை கூறுகிறது.

### சிறப்பான வரவேற்பு

“மோடியை வரவேற்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண் டார்” என்று தி நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை மற்றொரு செய்தியில் குறிப்பிட்டிருந்தது.

சர்வதேச அரசியலில் ரஷ்யா, சீனாவோடு அமெரிக்கா ஒரேநேரத்தில் மோதிக் கொண்டிருக்கையில், இந்தியா தங்களுடன் இருக்க வேண்டும் என்று பைடன் விரும்புகிறார். கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தன் மூலம் செய்தியாளர்களின் கேள்விகளை மோடி எதிர் கொள்ள ஜோ பைடன் வழிவகை செய்ததே மோடியுடைய பயணத்தின் முக்கிய அம்சமாகும்.

செய்தியாளர்களின் கேள்விகளை மோடி நேரடியாக எதிர்கொள்வது என்பது கடந்த பத்தாண்டுகளில் மிகவும் அரிதான ஒன்று. இந்தியாவில் சிறுபான்மையினர் மற்றும் ஜனநாயகம் பற்றிய கேள்வி எழுப்பப்பட்ட போது, “இந்தியாவின் மரபணுவிலேயே ஜனநாயகம் இருக்கிறது, மத



ரீதியாக யார் மீதும் பாகுபாடு காட்டப்படவில்லை,” என்று மோடி பதிலளித்தார்.

“இந்தியாவில் மோடி ஆட்சியில் அதிருப்தியாளர்கள் ஒடுக்கப்படுகிறார்கள், பத்திரிகை சுதந்திரம் பலவீனமாக்கப்படுகிறது என்பன போன்ற புகார்களைப் பெரிதாக்காமல் ஜோ பைடன் சற்று அடக்கியே வாசிக்கிறார்,” என்று திரை நியூயார்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரத்தில், சீன அதிபர் ஷி ஜின்பிங்கை ஒரு சர்வாதிகாரி என்று கூறிவிட்டு, அந்தக் கூற்றில் இருந்து பின்வாங்காமல் ஜோ பைடன் உறுதியாக இருந்தார். சீனா மற்றும் ரஷ்யாவின் முரட்டு அணுகுமுறைக்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவுத் தளத்தை விரிவாக்க பைடன் விரும்புகிறார்.

“பனிப்போர் தொடங்கி இன்று வரையிலும் கூட இந்தியா அணிசேரா நாடு என்ற நிலைப்பாட்டில் தொடரவே விரும்புகிறது. உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை இந்தியா இன்னும் கண்டிக்கவில்லை.

மறுபுறம், சீனாவுடனான எல்லை நெடுகிலும் இந்தியாவுக்கு பதற்றம் இருக்கிறது. ஆனால், சீனாவை முன்னிறுத்தி இந்தியா அமெரிக்காவுக்கு ஆதரவான நாடாக மாறுமா இல்லையா என்பதை உறுதியாகக் கூற முடியாது,” என்று அந்த நாளிதழ் கூறுகிறது.

“சொந்த மாநிலமான குஜராத்தில் நடந்த வகுப்புவாத வன்முறைகளின் எதிரொலியாக, மோடிக்கு அவர் பிரதமராகும் முன்பாக அமெரிக்க விசா மறுக்கப்பட்டது. மோடியுடனான தனிப்பட்ட உரையாடலின் போது மனித உரிமை மீறல் பிரச்னைகளை அதிபர் பைடன் எழுப்புவார் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ரஷ்யா மீதான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வரும் என்பதற்கான எந்தவொரு சமிக்ஞை களையும் நரேந்திர மோடி தரவில்லை. அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதுகூட, ரஷ்யா, சீனா ஆகிய பெயர்களை மோடி உச்சரிக்கவே இல்லை,” என்று தி நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.



### பைடனுக்கு மோடி ஏன் முக்கிய மானவர்?

அமெரிக்காவை சேர்ந்த மற்றொரு முன்னணி நாளிதழான “தி வாஷிங்டன் போஸ்ட்“ பத்திரிகையும் மோடியின் அமெரிக்கப் பயணம் குறித்துப் பல செய்திகளை வெளியிட்டுள்ளது.

அவ்வாறான ஒரு செய்தியில், “பலவாறாக கேள்விகள் எழுந்துள்ள போதிலும் இந்தியாவின் ஜனநாயகத்தை அதிபர் பைடன் ஏற்றுக் கொண்டுள்ளார்” என்று தி வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

“இந்தியாவும் அமெரிக்காவும் ஜனநாயக நாடுகள் என்று பைடன் கூறினார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் ஆழமானது. ஆனால், சீனாவை இதனுடன் ஒப்பிட முடியாது. ஏனெனில், அங்கே ஜனநாயகம் இல்லை என்பது மிக முக்கியமான காரணம். பன்முகத்தன்மை, வெளிப்படைத்தன்மை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை இரு நாட்டு ஜனநாயகமும் உள்ளடக்கியுள்ளது என்று பைடன் கூறினார்,” என்று அந்த நாளிதழ் கூறியுள்ளது.



“பைடன் ஆட்சியில், மூன்று நாடுகளின் தலைவர்கள் மட்டுமே, அதாவது பிரதமரோ, அதிபரோ அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணமாக அழைக்கப்பட்டுள்ளனர்” என்று தி வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பாக, பிரெஞ்சு அதிபர் எம்மானுவேல் மக்ரோன், தென் கொரிய அதிபர் யூன் சுக் யோல் ஆகியோர் மட்டுமே அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளனர். அந்த வகையில், மோடி மூன்றாவது விருந்தினர் ஆவார். 2016ஆம் ஆண்டும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் மோடி உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

அமெரிக்க நாடாளுமன்றத்தில் மோடி உரையாற்றுகையில் எம்.பி.க்கள் பலமுறை எழுந்து நின்று பாராட்டு தெரிவித்தார்கள். அதேநேரத்தில், பார்வையாளர் பகுதியில் இருந்து மோடி, மோடி என்று முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



வெள்ளை மாளிகைக்கு வெளியே மோடியை வரவேற்க அவரது ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டிருந்தனர். இரண்டு சிறந்த நாடுகள், 2 வலிமையான நண்பர்கள் மற்றும் 2 வலிமையான நாடுகள் 21ஆம் நூற்றாண்டின் திசையைத் தீர்மானிக்கும் என்று பைடன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியாவில் அமெரிக்கா ஜெம் இன்ஜின்களை தயாரிப்பது உள்ளிட்ட சில முக்கியமான ஒப்பந்தங்கள் இரு நாடுகளிடையே உள்ளன. அதுதவிர, இந்தியாவில் பெங்களூரு, ஆமதாபாத் ஆகிய நகரங்களில் அமெரிக்கா தனது துணைத் தூதரகங்களை திறக்கவுள் ளது,” என்று அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பத்திரிகையாளர் சந்திப்பில் மோடியிடம் செய்தியா ளர்கள் கேள்வி எழுப்பியதை, அமெரிக்காவின் முன்னணி செய்தித் தளமான ஆக்ஸியோஸ் முக்கியத்துவம் கொடுத்துப் பதிவு செய்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.எம்.எஃப்பை கையாள முடியாத தமிழர்கள்?

**நிலாந்தன்**

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 53 வது கூட்டத்தொடர் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகியது. இக்கூட்டத்தொடரில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை வாசிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கிய தமிழ் மக்களின் கவனக்குவிப்பு ஒப்பீட்டளவில் குறைந்து விடுகின்றது. ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கும் தமிழர் அமைப்பு என்ற ஒரு அமைப்பு ஐநா விவகாரங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. அதேசமயம் இம்முறை நாட்டிலிருந்து மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு அரசியல்வாதிகள் யாரும் சென்றிருக்கவில்லை. அண்மை ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடருக்குச் செல்லும் தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கி விட்டது. இந்த விடயத்தில் தமிழ்த் தரப்பிடம் ஒருவித சோர்வு அல்லது ஊக்கமின்மை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன?

இத்தனைக்கும் கடந்த ஆண்டிலிருந்து ஐநா இலங்கை இனப்பிரச்சனை தொடர்பில் ஒரு பொறிமுறையை உருவாக்கிச் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்து வருகின்றது. இந்தப் பொறிமுறை சிரியா போன்ற இடங்களுக்கு உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறையைப் போன்ற பலமான ஒன்று இல்லைத்தான். அது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஒன்றுதான். என்றாலும் தமிழர்களுக்கு சாதகமான ஒரு நகர்வு அது. அதில் ஒன்றுமே இல்லை என்று நிராகரிக்க முடியாது. சரியோ பிழையோ, போதுமோ போதாதோ அது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளில் பெறுமதியானவை. எனவே அப்பொறிமுறையை தமிழர்கள் நீண்ட கால நோக்கில் கையாள வேண்டும். ஆனால் அவ்வாறு கையாள்வதற்குரிய அரசியல் தரிசனமோ கட்டமைப்புகளோ வழி வரைபடங்களோ ஈழத்தமிழர்களிடம் உண்டா?

ஐநாவைக் கையாள்வது என்பது அதன் எல்லாப் பரிமாணங்களிலும் வெளியுறவுக் கொள்கை சார்ந்த ஒரு விடயந்தான். நிச்சயமாக மனிதாபிமான அல்லது நீதிநெறி சார்ந்த அல்லது அறநெறி சார்ந்த ஒரு விடயம் அல்ல.

எனவே ஐநாவும் உட்பட மேற்கு நாடுகளையும் பிராந்தியத்தில் இந்தியாவையும் சீனாவையும் கையாள்வதற்கு தேவையான ஒரு வெளியுறவுத் தரிசனம் அல்லது கொள்கை தமிழ்த்தரப்பிடம் உண்டா? அப்படி ஒரு வெளியுறவுக் கொள்கை இருந்தால்தான் அதற்குத் தேவையான வெளியுறவுக் கட்டமைப்பும் இருக்கும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழர்கள் ஐநாவை கட்டமைப்புச் சார்ந்து ஒரு மையத்தில் இருந்து அணுகவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சுமந்திரன் சொன்னார், வெளியுறவுக் கொள்கையை வெளிப்படையாக விவாதிக்க முடியாது என்று. ஆனால் அவர் அப்படி சொன்னதன் பொருள் அவரிடம் ரகசியமான ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டு என்பதல்ல. அவரிடம் வெளியுறவுக் கொள்கையே இல்லை என்றுதான் பொருள். அப்பொழுதும் இல்லை இப்பொழுதும் இல்லை. ஏனெனில் அப்படி ஒரு கொள்கை இருந்திருந்தால் அதைக் கையாள்வதற்கு தமிழரசுக் கட்சியிடம் ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும், ஆனால் அக்கட்சியிடம் கட்டமைப்புசார் அணுகுமுறை இல்லை. அதனால் தனி நபர் ஓட்டங்களே அதிகமாக உள்ளன.

தமிழரசுக் கட்சியிடம் மட்டுமல்ல பூகோள அரசியல் குறித்து அதிகமாகக் கதைக்கும் கஜேந்திரகுமாரிடமும் ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டா? கொள்கையிருந்தால் அதை நடைமுறைப் படுத்த ஒரு கட்டமைப்பு இருந்திருக்கும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் வெளியுறவு அணுகுமுறை அல்லது வெளிநாடுகளை நோக்கிய அணுகுமுறை என்று தொகுத்துப் பார்த்தால் கடந்த 14 ஆண்டுகளாக பின்வரும் போக்குகளை அவதானிக்க முடியும்.

சுமந்திரன் மற்றும் சம்பந்தரிடம் துலக்கமான ஒரு வெளியுறவுக் கொள்கை இல்லை. சுமந்திரன் அதிகம் மேற்கை நோக்கிச் சாயும் ஒருவராகப் பார்க்கப்படுகிறார். ஆனால் இந்தியாவைப் பகைப்பதில்லை. அதேசமயம் தமிழரசுக் கட்சிக்குள் தனிப்பட்ட உறுப்பினர்களிடம் இந்தியாவை நோக்கிய சாய்வு உண்டு. அது வெளியுறவுக் கொள்கை சார்ந்த நிலைப்பாடு என்பதைவிடவும் கட்சிக்குள் தமது ஸ்தானத்தைப் பலப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கை என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 14 ஆண்டு கால தமிழரசுக் கட்சியின் வெளியுறவு நிலைப்பாடுகளை தொகுத் துப் பார்த்தால் அக்கட்சியானது, அதிகம் மேற்கை நோக்கியே சாய்கின் றது. அதேசமயம், பலமான நாடுகளின் இழுவிசைகளுக்கிடையே பேர அரசியலை முன்னெடுக்கத் தவறியிருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை அதுவும் ஒரு மேற்கை நோக்கிய கட்சிதான். அது திட்டவட்டமாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களை எதிர்க்கப் போவதில்லை என்று அக்கட்சி அறிக்கைகளில் கூறிக் கொண்டாலும், நடைமுறையில் தனது எதிரிகளை இந்தியாவின் அடிவருடிகள் அல்லது கைக்கூலிகள் என்று கூறுவதன் மூலம் அது இந்தியாவை ஒரு எதிர்த் தரப்பாகவே உருவகப்படுத்துகின்றது. இந்தியாவை ஒரு எதிர்த் தரப்பாகக் கருதினால் அதன் தர்க்கபூர்வ விளைவாக மேற்கைத்தான் கையாள வேண்டியிருக்கும். கடந்த 14 ஆண்டுகால அக்கட்சியின் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால், அது மேற்கை நோக்கிய ஒரு கட்சிதான். ஆனால் அக்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்றால், முன்னணியானது வெளிப்படையாக பலமான நாடுகளை நோக்கிச் சாய்வதில்லை என்பதுதான்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்துப் பார்த்தால் விக்னேஸ்வரனின் கட்சி ஒப்பீட்டளவில் இந்தியாவை நோக்கிச் சாய்வதாகத் தெரிகிறது. 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய ஒரு நடைமுறை வழிவரைபடத்தை விக்னேஸ்வரன் இப்பொழுது முன்வைக்கின்றார். அது இந்தியாவை நோக்கிய ஒரு சாய்வுதான்.




இவைதவிர ஏனைய கட்சிகள் அதாவது ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் காணப்படும் கட்சிகளைத் தொகுத்து பார்த்தால், அவை இந்தியச் சாய்வு நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்தான். அதில் உள்ள பெரும்பாலான கட்சிகள் முன்பு இந்தியாவோடு சேர்ந்து உழைத்தவை. இப்பொழுதும் இந்தியாவுக்கு விசுவாசமானவை. மேலும் அக்கூட்டுக்குள் காணப்படும் ஜனநாயக போராளிகள் கட்சியும் அண்மை காலங்களில் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்லும் ஒரு கட்சியாகத்தான் பார்க்கப்படுகிறது. அக்கூட்டமைப்புக்குள் இருப்பவை அநேகமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள். அதில் டெலோவையும் புளட்டையும் தவிர ஏனைய கட்சிகளுக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மக்கள் ஆணை கிடையாது. எனவே தொகுத்துப் பார்த்தால் ஜனநாயக கூட்டமைப்புத்தான் ஒப்பீட்டளவில் வெளிப்படையாக இந்தியச் சாய்வுடைய ஒரு வெளியுறவு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

> **ஐ.எம்.எஃப்பும் மேற்குநாடுகளும் ரணில் விக்கிரமசிங்க வுக்கு தொடர்ந்து உதவுகின்றன என்றால், புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகமும் உட்பட தமிழ்த்தரப்பு மேற்கு நாடுகளை பொருத்தமான விதங்களில் கையாள்வதில் தோல்வி அடைந்துவிட்டது என்று தானே பொருள்?**

எனவே தமிழ்த் தேசிய பரப்பில் காணப்படும் கட்சிகளை அல்லது கட்சிக்கூட்டுக்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது இதில் ஒப்பீட்டளவில் இந்தியாவை விடவும் மேற்கே நோக்கி அதிகம் சாய்கின்ற கட்சிகள்தான் பலமாக இருக்கின்றன என்பது தெரிகிறது. அவ்வாறு மேற்கை நோக்கிய வெளியுறவு நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன என்றால் மேற்படி கட்சிகள் ஐநாவையும் கட்டாயம் கையாள வேண்டும். ஏனென்றால் மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள்தான் ஐநாவும் வருகின்றது. ஆனால் மேற்படி கட்சிகளிடம் ஐநாவைக் கையாள்வதற்குரிய சரியான வழிவரைபடம் ஏதும் இருக்கின்றதா ?

இங்கு ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஐநா கூட்டத் தொடரை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மூன்றையும் இணைத்து ஒரு கடிதம் எழுதப்பட்டது. கடிதத்தில் ஒரு முக்கியமான விடயம் கேட்கப்பட்டது. பொறுப்புக் கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதே அது. எனவே பொறுப்புக் கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்து ஐநா பொதுச்சபையானது அதனை சர்வதேச நீதிமன்றங்களை நோக்கிக் கொண்டுபோக வேண்டும் என்ற தொனிப்பட மேற்படி கடிதம் எழுதப்பட்டது. இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு கிட்டத்தட்ட முப்பது மாதங்கள் ஆகின்றன. ஆனால் அக்கோரிக்கையை நோக்கி மேற்படி கட்சிகள் எந்தளவுக்கு உழைத்திருக்கின்றன ?

எந்த ஒரு கட்சியும் அவ்வாறு உழைக்கவில்லை என்றே தெரிகிறது. அவ்வாறு உழைத்து இருந்திருந்தால் ஒரு பொருளாதார நெருக்கடியின்போது இலங்கை அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்பட்ட மேற்கத்திய நாடுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான நிர்பந்தங்கள் எவையும் பிரயோகிக்கப்படவில்லை என்பதைத்தான் நாட்டில் நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் நமக்கு உணர்த்துகின்றது. ஐ.எம்.எஃப், உலக வங்கி போன்றன பெருமளவுக்கு மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள் காணப்படும் உலகப் பொதுக்கட்டமைப்புகள். எனவே மேற்கைக் கையாள்வது என்ற நடைமுறையை கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஐ.எம்.எஃப்பை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றனவா? அல்லது பலமிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதை செய்திருக்கின்றதா?

அவ்வாறு செய்திருந்திருந்தால் நிதி உதவியும் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாதபடி பிணைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பிணைக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, ஐ.எம்.எஃப். பிரதிநிதிகள், தென்னிலங்கையிலுள்ள சிவில் சமூகங்களைச் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவ்வாறு தமிழ்ச் சிவில் சமூகங்களை என் இதுவரை சந்திக்கவில்லை? எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவை காப்பாற்றுவதான மேற்கு நாடுகளின் நிலைப்பாடு எனப்படுவது, தமிழ்க் கட்சிகளின் மேற்கை நோக்கிய அணுகுமுறையின் இயலாமையைக் காட்டுகிறது.

ஐ.எம்.எஃப்பின் உதவிகள் கிடைக்கும் ஒரு காலகட்டத்திலேயே சிங்கள பௌத்தமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றமை என்பது அந்த இயலாமைக்குச் சான்று. அரசாங்கம் ஒருபுறம் ஐநாவின் நிலைமாறு கால நீதிக்கான கட்டமைப்புகளில் ஒன்றாகிய உண்மை மற்றும் நீதிக்கான ஆணைக் குழுவை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் அதற்குச் சமாந்தரமாக சிங்களபௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஆயின், அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கு அதாவது நிலைமாறு கால நீதிக்கு விசுவாசமாக இல்லை என்று பொருள்.

எனினும் ஐ.எம்.எஃப்பும் மேற்குநாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்து உதவுகின்றன என்றால், புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகமும் உட்பட தமிழ்த்தரப்பு மேற்கு நாடுகளை பொருத்தமான விதங்களில் கையாள்வதில் தோல்வி அடைந்துவிட்டது என்று தானே பொருள்?

# அமெரிக்காவில் மோடிக்கு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

“இந்திய பிரதமர் மோடி செய்தியாளர்களின் கேள்விகளை அரிதாகவே எதிர்கொள்பவர். அது வியாழனன்று நடந்தது. சீனாவை கட்டுப்படுத்த இந்தியாவுடனான உறவை ஆழமாக வலுப்படுத்திக் கொள்ள விரும்பியே மோடியை அரசுமுறைப் பயணமாக பைடன் அழைத்துள்ளார்.

ஆனால், இந்தியாவில் மனித உரிமை மீறல்கள், சிறுபான்மையினர் உரிமைகள் போன்ற பிரச்னைகள் மோடியின் இந்தப் பயணத்தில் நிழலாகப் படிந்துவிட்டன,” என்று அந்த தளம் குறிப்பிட்டுள்ளது.

**சீனாவுக்கு சவாலா?**

வாய்ஸ் ஒப் அமெரிக்காவும் மோடியின் வருகை குறித்து சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

“கடந்த 2005ஆம் ஆண்டு மத வன்முறைக்காக மோடிக்கு அமெரிக்க விசா மறுக்கப்பட்டது. ஆனால், தற்போது மோடியை வரவேற்க ஒன்றுவிடாமல் அனைத்தையும் பைடன் செய்து முடித்துள்ளார்.

மோடிக்கு பைடன் இவ்வளவு சிறப்பான வரவேற்பைக் கொடுக்க இரண்டு காரணங்கள் உள்ளன. சீனாவை கட்டுப்படுத்த இந்தியா வலுவாக இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. அத்துடன், ரஷ்ய ஆயுதங்களை இந்தியா சார்ந்திருக்கும் நிலை முடிவுக்கு வர வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் சீனாவுடன் வெளிப்படை யாக மோதிக் கொண்ட ஒரே நாடு இந்தியா மட்டுமே. இரு நாடுகளும் 3,400 கி.மீ. நீள எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளன. எல்லை நெடுகிலும் இரு நாடுகளும் ராணுவ நிலைகளை வலுப்படுத்தி வருகின்றன,” என்று வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா கூறியுள்ளது.

“இந்திய ராணுவத்தை நவீனமாக்க அமெரிக்கா ஆதரவு தருகிறது. சீனா, பாகிஸ்தான் எல்லையைக் கண்காணிக்க அமெரிக்காவிடம் இருந்து 3 பில்லியன் டாலருக்கு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் ஆளில்லா விமானங்களை இந்தியா வாங்குகிறது.

அதுதவிர, அமெரிக்காவை சேர்ந்த ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் இந்திய அரசின் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் போர் விமான இன்ஜின்களை உற்பத்தி செய்யப் போகிறது,” என்றும் வாய்ஸ் ஒப் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அட்லாண்டிக் கவுன்சிலில் சீனியர் உறுப்பினரான இர்பான் நூருதீன், “இந்தியா - அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பில் மோடியின் இந்தப் பயணம் ஒரு மைல்கல்லாக அமையும்,” என்று கூறியுள்ளார்.

“அமெரிக்க தொழில்நுட்பத்தை நோக்கி இந்தியா நகர்கிறது. அதன் பொருள், அமெரிக்க ராணுவ சிஸ்டத்துடன் சீனா போட்டியிட நேரிடும் என்பதே அதன் பொருள். சீனா தற்போது பசிபிக் பிராந்தியத்தல் ஜப்பான் மற்றும் அதோடு சேர்த்து அமெரிக்கா, அதன் கூட்டாளியான தென்கொரியாக ஆகிய நாடுகளுடன் போட்டியிடுகிறது.

இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா - இந்தியா கூட்டணியை சீனா எதிர்கொள்ள நேரிடலாம். அத்துடன், இந்தியாவுடனான எல்லையில் அமெரிக்க தொழில்நுட்பத்தையும் சீனா எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இது சீனாவுக்கு சவாலான காரியமாக இருக்கும்,” என்கிறார் இர்பான் நூருதீன்.

அமெரிக்காவை சேர்ந்த சி.என்.என்.செய்தித் தொலைக்காட்சி, “இந்தியாவில் மோடிக்கு மிகப் பெரிய செல்வாக்கு இருக்கிறது. அதேநேரத்தில், சர்வாதிகாரத் தனமான அவரது செயல்பாடுகள் மேற்குலகிற்குக் கவலை தருகிறது.

அதிருப்தியாளர்களை அவர் புறக்கணித்தார். பத்திரிகையாளர்களை குறி வைத்தார். முஸ்லிம்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டுவதாக மனித உரிமை அமைப்புகள் கூறும் கொள்கைகளை முன்னெடுத்தார்,” என்று கூறுகிறது.

“உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. ஆசியாவில் பைடன் நிர்வாகம் வகுக்கும் உத்தியில் இந்தியா முக்கிய கதாபாத்திரமாக உருவெடுத்துள்ளது. அண்மையில் மக்கள் தொகை அடிப்படையில் சீனாவை இந்தியா முந்திவிட்டது.

காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய பிரச்னைகளை இந்தியாவையும் உடன் சேர்த்துக் கொள்ளாமல் தீர்வு காண முடியாது என்று பைடன் நம்புகிறார்,” என்று சி.என்.என் செய்தி வெளியிட்டுள்ளது.

# டெங்கு நோய் பரவலை தடுப்பதற்கு விசேட திட்டம்!

கொழும்பு, ஜூன் 26

டெங்கு நோயால் இந்த ஆண்டில் இதுவரை 200 மரணங்கள் பதிவாகியுள்ளன. கொழும்பு மாவட்டம் அதிக அபாய வலயமாக இனங் காணப்பட்டுள்ளது. இதனால், முப்படையினரின் ஒத்துழைப் புடன் இந்த வாரம் கொழும் பில் சுற்றுச்சூழல் தூய்மைப் படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.



ஜனாதிபதி ஊடக மையத் தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயு இதனைத் தெரிவித்தார்.

இவ்வாண்டில் இதுவரை யான காலப்பகுதியில் 200 டெங்கு மரணங்கள் பதிவா கின. 2017 - 2019க்கு இடைப்பட்ட காலத்தில் பதிவானதைவிட அதிகளவான டெங்கு நோயாளர்கள் சுமார் 6 மாத காலப்பகுதியில் இனங் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு டெங்கு நோயா ளர்களின் எண்ணிக்கை தீவிர மாக அதிகரித்து வருகின்ற மையை கட்டுப்படுத்துவதற் காகவே விசேட அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. தற்போது அக்குழுவால் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

காலநிலை மாற்றத்துக் கேற்ப ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் டெங்கு நோய் பரவும் வீதம் சடுதியாக அதிகரிக்கும். இந்த நிலை மையை கட்டுபடுத்துவதற்காக 9 மாகாணங்களிலும் 9 டெங்கு ஒழிப்பு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

ஒட்டு மொத்த டெங்கு நோயாளர்களில் 50 சதவீத மானோர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாவர்.

இவை தவிர மத்திய , தென் , வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அடுத்தடுத்த கட்டங்களில் உள்ளன. டெங்கு நோய் பரவல் தீவிரமடை வதற்கு தொடர்ந்தும் இடம ளிக்கப்படக்கூடாது என்ப தற்காக இந்த வாரம் விசேட வேலைத்திட்டத்தை நடை முறைப்படுத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய இவ்வார இறுதியில் முப்படையினரின் ஒத்துழைப்புடன் கொழும்பில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெ டுக்கப்படவுள்ளன. கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளின் ஊடாக இது தொடர்பில் மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்படும். (ஐ)










# காரைதீவில் சிறப்புற நடந்த 33ஆவது தியாகிகள் தினம்!

காரைதீவு, ஜூன் 26

ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியின் 33 வது தியாகிகள் தினம் நேற்று காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அம்பாறை மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பாளர் எஸ். புண்ணியநாதன் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டார்.

மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து உயிர் நீத்தவர்களின் உறவுகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

ஜூன் 19 ஆம் திகதி தோழர் பத்மநாபாவும் 13 தோழர்களும் படுகொலை செய்யப்பட்ட தினத்தையே தியாகிகள் தினமாக அனுஷ்டித்து வருகிறார்கள்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மறைந்த தலைவர் தோழர் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (அ)

# அக்கரைப்பற்றுக்கு இரவுநேர பஸ் சேவை

மட்டக்களப்பு, ஜூன் 26

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு மட்டக்களப்பு நோக்கிப் புறப்படும் புளத்திசி கடுகதி ரயிலில் பயணிக்கும் பயணிகளின் நன்மை கருதி மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கான இரவு நேர பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் போக்குவரத்து அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு டிப்போவினால் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# மூதூர் மீனவர்களுக்கு உதவி

திருமலை, ஜூன் 26

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி அனுசரணையில் மூதூர் கட்டைபறிச்சான் கிராமத்தில் இறால் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களை ஊக்குவித்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 40 மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. அத்துடன் தொழிலில் ஈடுபடும்வரை அவர்களது உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக தலா 2,500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.






# 25 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கல்

காரைதீவு, ஜூன் 26

ஹற்றன் நாசனல் வங்கியின் சமூக மேம்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேசத்தில் 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

காரைதீவு ஹற்றன் நாஷனல் வங்கியின் முகாமையாளர் கே.ஜெயபாலன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாக வங்கியின் பிராந்திய முகாமையார் என் .கேதீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்ஸிமா பஷீர் கௌரவ அதிதியாகவும், வங்கியின் பிராந்திய கடன் பிரிவுத் தலைவர் எஸ். சத்தியசீலன், பிராந்திய கடன் அறவீட்டுப்பிரிவுத் தலைவர் ஏ.எல்.சிறாஜ் அகமட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு மூன்று மாதங்களுக்கு தேவையான மாதாந்த உலர் உணவுப்பொதிகள் சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக தாய்மாரின் ஆரோக்கியத்துக்காக வழங்கப்பட்டது .

சமகால பொருளாதார நெருக்கடியில் இருந்து கர்ப்பிணி தாய்மாரை மீட்டு உடல் நலத்தின் மேம்பாட்டை உறுதிப் படுத்தும் முகமாக இத்திட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டது. (அ)

# வாகூரவெட்டையில் கதிர்காமம் யாத்திரீகர்களுக்கு இலைக்கஞ்சி

காரைதீவு, ஜூன் 26

கதிர்காம காட்டுப் பாதை வழியாக கதிர்காமம் செல்லும் அடியார்களுக்கு, முதல் நாள் முதல் தரிப்பிடமான வாகூர வெட்டையில்( வண்ணாத்திர கிணற்றடி) இலைக்கஞ்சி நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

பிரபல சமூக சேவையாளரும், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். அவர் தலைமையிலான குழுவினர் காட்டுக்குள் இந்த இலைக் கஞ்சியைக் காய்ச்சி சுடச்சுட வழங்கினர்



# கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தால் அதிகஷ்ட பிரதேச பாடசாலைக்கு கதிரைகள்

மட்டக்களப்பு, ஜூன் 26

கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அதிகஷ்ட பாடசாலையான கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்திற்கு பிளாஸ்ரிக் கதிரைகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பூரண அனுசரணையுடன் சிறுவர் வறுமை நிவாரண நிதியம் என்ற அமைப்பினூடாக பாடசாலையில் அமையப்பெற்றுள்ள தற்காலிக நூலகத்துக்கு 25 பிளாஸ்ரிக் கதிரைகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

இந்த உதவியை, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் எ.பிரியகாந்தன், பொருளாளர் க.சண்முகநாதன், கிழக்கு மாகாண ஆசியர் சங்கத்தின் பிரசார செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான அ.ரமணன், அதன் மாவட்ட செயலாளர் தி.கிருபாகரன், சிறுவர் கல்வி மேம்பாட்டு நிதியத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பெ.புவனசுந்தரம், செயற்பாட்டாளர், சிவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டு பாடசாலையின் அதிபர் வ.துசாந்தன், ஆசிரியர் க.சந்திரகுமார், மாணவர்கள் ஆகியோரிடம் கையளித்தனர். (அ)



# மாவடி கந்தசுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம்!



காரைதீவு, 26

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விசேட கர்மாரம்ப கிரியைகளுடன் ஆரம்பமானது.

இன்று திங்கட்கிழமை முடிவடையும். நாளை செவ்வாய்க்கிழமையும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

மறுநாள் புதன் கிழமை காலை 9 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் தெரிவித்தார். (அ)

# ஆயுத கிளர்ச்சியில் திடீரெனத் திருப்பம்!

## வாக்னர் படைகளைத் தளத்துக்கு திரும்புமாறு ப்ரிகோஜின் உத்தரவு!

## இரத்தக் களரியைத் தடுக்க பெலாரஸ் நாடு சமரச முயற்சி



மொஸ்கோ, ஜூன் 26

ரஷ்யாவில் வாக்னர் துணைப்படை ஆரம்பித்த திடீர் ஆயுதக் கிளர்ச்சி அற்ப ஆயுளில் முடிவடைந்துள்ளது . மொஸ்கோ நோக்கி முன்னேறி நகரின் விளிம்பு வரை வந்த தனது படை வீரர்களைத் தளங்களுக்குத் திரும்புமாறு வாக்னர் தனியார் படையின் தளபதி ப்ரிகோஜின் திடீரென உத்தரவிட்டிருக்கிறார். எவரும் எதிர்பாராத இந்த முடிவு பெலாரஸ் நாட்டு அதிபரது முயற்சியை அடுத்து இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தனது படைவீரர்களது முன்நகர்வுகளை நிறுத்துவதற்குப் ப்ரிகோஜின் இணங்கியுள்ளார் என்ற தகவலை பெலாரஸ் நாட்டின் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ நேற்று மாலை அறிவித்திருந்தார். அவரது அறிவிப்பு வெளியாகிய பின்னரே படைகளைத் தளம் திரும்பும் உத்தரவை ப்ரிகோஜின் விடுத்துள்ளார்." பெரும் இரத்தக் களரியைத் தவிர்ப்பதற்காகவே" இந்த முடிவு எட்டப்பட்டது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பெலாரஸின் சமரச முயற்சிகளில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் படி ஆயுதக் கிளர்ச்சியைக் கைவிட்டு வாக்னர் தலைவர் ப்ரிகோஜின் ரஷ்யாவில் இருந்து பெலாரஸ் நாட்டுக்கு வெளியேறுவார் என்றும் -

புடின் அவர் மீது அறிவித்த தேசத் துரோகக் குற்றச்சாட்டுக்காகத் தண்டனைகளில் இருந்து விலக்களிக்கப்படுகிறது என்றும் -

ரஷ்ய அரச செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது. வாக்னர் துணைப்படை வீரர்கள் விரும்பினால் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்துக்குள் கிரெம்ளினை அதிர வைத்த புடினின் சகாவான ப்ரிகோஜினின் ஆயுதக் கிளர்ச்சியின் எதிர்காலமும் அவரது கதியும் என்னவாகும் என்ற கேள்விகள் இதனால் எழுந்துள்ளன.

முன்னேறிய பகுதிகளில் இருந்து படைகளைத் திருப்பி அழைக்கின்ற இணைக்கப் பேச்சுக்களில் பெலாரஸ் அதிபர் - வாக்னர் தலைவர் மற்றும் அதிபர் புடினின் பிரதிநிதி ஆகிய முத்தரப்பினர் பங்குபற்றியிருந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பல்லாயிரக் கணக்கான வாக்னர் படைகள் வண்டி வாகனங்களுடன் உக்ரைனின் கிழக்குப் பகுதி ஊடாக எல்லை தாண்டி ரஷ்யாவின் மேற்குப் பகுதிக்குள் பிரவேசித்து அங்கிருந்து மொஸ்கோ செல்லும் நெடுஞ்சாலை வழியே முன்னேறத் தொடங்கின. ரஷ்ய ராணுவத் தலைமையைத் தூக்கி எறிவதற்கான நீதிக்கான பயணம் அது என்று ப்ரிகோஜின் அறிவித்திருந்தார்.

அவரது அந்த அதிரடி நடவடிக்கை கிரெம்ளினையும் சர்வதேச நாடுகளையும் அதிர வைத்திருந்தது.

தென் பகுதியில் இரண்டு முக்கிய நகரங்களை எதிர்ப்பின்றிக் கைப்பற்றிய வாக்னர் கிளர்ச்சிப் படை அங்கிருந்து மிக வேகமாக தலைநகரம் நோக்கி முன்னேறி வந்தது.

துணைப்படைகளது வருகையைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை மொஸ்கோ நகரில் ரஷ்ய இராணுவம் தீவிரமாக முன்னெடுத்திருந்தது. நகருக்குச் செல்லும் வீதிகளில் சோதனைச் சாவடிகளும் பதுங்கு குழிகளும் காவல் அரண்களும் நிறுவப்பட்டு வந்தன. நகர நிர்வாகம் திங்கட் கிழமையை விசேட விடுமுறை நாளாக அறிவித்தது. அவசர தேவைகள் தவிர்ந்த ஏனைய நடமாட்டங்களைத் தவிர்த்து விட்டு வீடுகளில் தங்கியிருக்குமாறு மொஸ்கோ வாசிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. (அ)

# வழமைக்கு திரும்பியது ரஷ்யா

மொஸ்கோ, ஜூன் 26

தெற்கு ரஷ்ய நகரமான ரோஸ்டோவ் - ஆன் - டானிலிருந்து வாக்னர் கூலிப்படையினர் வெளியேறியுள்ளனர். இதனால் நகரில் பெரும் கொண்டாட்டங்கள் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கூலிப்படை தலைவர் ப்ரிகோஜின் சிரித்துக் கொண்டே ஆதரவாளர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு நகரத்திலிருந்து வெளியேறினார்.

அதே நேரத்தில் அவரது வீரர்கள் தங்கள் தளங்களுக்குச் செல்ல ட்ரக்குகளில் ஏறினர்.

பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவின் மத்தியஸ்த ஒப்பந்தத்தின் கீழ், ப்ரிகோஜின் கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வந்து, ரஷ்யாவிலிருந்து வெளியேறி பெலாரஸில் தங்க ஒப்புக்கொண்டார்.

சனிக்கிழமை அதிகாலையில் வாக்னர் படையினால் கட்டுப்படுத்தப்பட்ட தெற்கு ரஷ்யாவில் ரோஸ்டோவ்-ஆன்-டான் மாவட்டத்தின் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது.

அத்துடன், கிளர்ச்சியையடுத்து ரஷ்யாவின் பல பகுதிகளில் விதிக்கப்பட்ட வீதிக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. (அ)

# ஈரானில் 26 வாகனங்கள் அடுத்தடுத்து மோதல்!

தெஹ்ரான், ஜூன் 26

தென்மேற்கு ஈரானின் கோகிலுயே மாகாணத்தில் இருந்து போயர் அகமது மாகாணம் நோக்கி ஒரு லொரி சென்று கொண்டிருந்தது.

இரும்பு கம்பிகளை ஏற்றிக் கொண்டு சென்ற அந்த லொரியில் திடீரென பிரேக் செயலிழந்தது. இதனால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொரி எதிரே வந்த வாகனங்கள் மீது மோதியது. இதனையடுத்து ஒன்றன் பின் ஒன்றாக 26 வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகின.

மேலும் சாலையில் நடந்து சென்ற பாதசாரிகள் மீதும் இந்த வாகனங்கள் மோதி பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர். 25 இற்கும் மேற்பட்டோருக்கு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றது.

இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே விபத்து நடந்த சாலையில் இருந்து வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

அதன்பிறகே அங்கு இயல்பு நிலை திரும்பியது. இதனால் பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.



# பெண் அதிகாரியின் குடையை பறித்தார் பாகிஸ்தான் பிரதமர்

பாரிஸ், ஜூன் 26

உலகளாவிய நிதியுதவி ஒப்பந்தம் தொடர்பான 2 நாள் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் சென்றுள்ளார்.

சவுதி மன்னர் சல்மான் பின் அப்துல் லாஜிஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன், எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா அல்-சிசி உள்ளிட்ட உலக தலைவர்களை அவர் சந்தித்தார்.

ஆனால் இந்த சந்திப்புகளை விட மாநாடு நடைபெறும் அரங்கத்திற்கு அவர் வந்துசேரும் வீடியோதான் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இது தொடர்பான வீடியோவில், ஷெபாஸ் ஷெரீப் காரிலிருந்து இறங்கும்போது மழை பெய்ததால் பெண் அதிகாரி ஒருவர் அவருக்கு குடை பிடித்தபடி வருகிறார்.

அப்போது அப்பெண் அதிகாரியிடம் இருந்து ஷெபாஸ் ஷெரீப் குடையை வாங்கிக் கொண்டு, தான் மட்டும் தனியாக செல்கிறார்.

அந்தப் பெண் அதிகாரி கொட்டும் மழையில் நனைந்தபடி பிரதமரை பின் தொடர்கிறார்.

பாகிஸ்தானின் சமூக ஊடக பயன்பாட்டாளர்கள் தங்கள் பிரதமரின் இந்த முரட்டுத்தனமான நடத்தையால் கோபம் அடைந்துள்ளனர்.

இது அநாகரிகமான செயல் என்று பிரதமரை அவர்கள் விமர்சித்து வருகின்றனர். (அ)

# வாக்னர் கூலிப்படை கிளர்ச்சியை ஜூன் நடுப்பகுதியிலேயே வெள்ளை மாளிகைக்கு அறிவித்த அமெ. உளவு அமைப்புகள்!

நியூயோர்க், ஜூன் 26

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைப்புக்கு எதிராக வாக்னர் கூலிப்படைத் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜின் ஆயுதம் ஏந்திய நடவடிக்கையைத் திட்டமிட்டுள்ளதாக ஜூன் நடுப்பகுதியில் அமெரிக்க உளவு அமைப்புகள் அறிந்திருந்ததாக வோஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உளவுத்தகவல் அவசரமாக வெள்ளை மாளிகை மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ப்ரிகோஜினின் திட்டங்களின் சரியான தன்மை மற்றும் நேரம் தெளிவாகத் தெரியவில்லையென உளவுத்துறை அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார்.

வாக்னர் குழுவின் நடவடிக்கை ஆரம்பிக்கும் வரை, நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் நாள் பற்றிய சரியான தகவலை பெறவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் "ஏதோ பிரச்னை இருக்கிறது என்பதற்கு போதுமான சமிக்ஞைகள் இருந்தன" ஒரு அமெரிக்க அதிகாரி கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொடர்ந்து ஆட்சியில் இருப்பாரா, ரஷ்யாவின் அணு ஆயுதக் கட்டுப்பாட்டில் எந்த உறுதியற்ற தன்மை ஏற்படக் கூடும் என்பது குறித்து கடந்த இரண்டு வாரங்களாக அதிக கவலை இருந்தது என்று அந்த அதிகாரி கூறினார்.

வெள்ளை மாளிகைக்கு கூடுதலாக, பென்ரகன், வெளியுறவுத்துறை மற்றும் காங்கிரஸில் உள்ள மூத்த அதிகாரிகளுக்கு கடந்த இரண்டு வாரங்களுக்குள் உளவுத்துறை தகவல் குறித்து விளக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த வாரம் காங்கிரஸ் தலைவர்களுக்கு அதிகாரிகள் விளக்கம் அளித்ததாக சி.என்.என் முன்பு தெரிவித்தது.

அனைத்து தன்னார்வப் பிரிவினரும் அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடவேண்டும் என்று ஜூன் 10 ஆம் திகதி ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு பிறப்பித்த உத்தரவு ப்ரிகோஜினின் கலகத்துக்கு முக்கிய காரணம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

உத்தரவில் வாக்னர் குழுவின் பெயரைக் குறிப்பிடவில்லை என்றாலும், உட்குறிப்பு தெளிவாக இருந்தது. உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவப் நடவடிக்கைக்கு இன்றியமையாததாக நிரூபித்த ப்ரிகோஜினின் கூலிப்படையை கலைப்பதை ரஷ்யா கலைப்பதை நோக்கமாக கொண்டிருந்தது.

ப்ரிகோஜினும், நேற்று முன் தினம் இதனை தெரிவித்தார். வாக்னர் படையை கலைக்க பாதுகாப்பு அமைச்சு முயற்சித்ததாக தெரிவித்திருந்தார்.

ஜூன் 10 அறிவிப்புக்குப் பிறகு உக்ரைனிய இராணுவ அதிகாரிகளும் ப்ரிகோஜினைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.மேலும் அவர் மொஸ்கோவுக்கு எதிராக தனது படைகளை அணி திரட்டக்கூடும் என்று நம்புவதாக உக்ரைனிய மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


ப்ரிகோஜின் ரஷ்ய நிலைப்பாடுகளுக்கு எதிராக நகர்வதற்கான சாத்தியக்கூறுகளை உக்ரைனிய அதிகாரிகளும் தீவிரமாக எடுத்துக் கொண்டனர் என அந்த அமெரிக்க அதிகாரி கூறினார்.

ப்ரிகோஜின் ஏதோ சதி செய்வதாக புடினுக்கும் தகவல் கிடைத்ததாக அமெரிக்க உளவுத்துறை அமைப்புகள் நம்புகின்றன. அவருக்கு எப்போது சொல்லப்பட்டது என்பது துல்லியமாகத் தெரியவில்லை என்றாலும், அது நிச்சயமாக 24 மணி நேரத்திற்கும் முன்னதாக கூறப்பட்டிருக்கும் என அமெரிக்க அதிகாரி கூறினார்.

ப்ரிகோஜின் இராணுவக் கட்டளையை கையகப்படுத்துவதையோ அல்லது மொஸ்கோவை நோக்கி நகர்வதையோ தடுக்க புடின் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வாக்னர் குழுவுடன் மோதி உக்ரைனில் தோல்வியை சந்திக்காமல், சமரச முறையில் தற்போதைக்கு பிரச்னையை தீர்க்கலாம் என புடின் நம்பியிருக்கலாம் என கூறப்படுகின்றது.

(அ)



## விம்பிள்டன் ரென்னிஸ் கரேன் கச்சனோவ் விலகல்

லண்டன், ஜூன் 26

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியிலிருந்து ரஷ்ய வீரர் கரேன் கச்சனோவ் விலகியுள்ளார்.

4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் அடுத்த மாதம் லண்டனில் தொடங்கவுள்ளது.

இந்தநிலையில், இந்தப் போட்டியில் பங்கேற்கவிருந்த ரஷ்ய வீரர் கரேன் கச்சனோவ் முதுகு வலி காரணமாக போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

மகளிர் ஆஷஷ் கிரிக்கெட்

## இங்கிலாந்தின் பியூமான்ட் அபார இரட்டைச் சதம்!




நாட்டிங்ஹாம், ஜூன் 26

மகளிர் ஆஷஷ் கிரிக்கெட் ஒரே டெஸ்ட்டாக நடைபெறுகிறது. அந்த டெஸ்ட் நாட்டிங்ஹாமில் வியாழக்கிழமை தொடங்கியது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் 473 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து ஆடிய இங்கிலாந்து அணி 463 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில் டாம்மி பியூமான்ட் இரட்டை சதமடித்து அசத்தினார். இங்கிலாந்து அணிக்காக முதல் இரட்டை சதமடித்த வீராங்கனையும் இவரே என்ற சாதனையை படைத்துள்ளார்.

ஆஸி. அணி இரண்டாவது இன்னிங்ஸில் 82 ஓட்டங்களுடன் விக்கெட் இழப்பின்றி 3ஆவதுநாளை முடித்தது. 92 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

டாம்மி பியூமான்ட் மகளிர் இரட்டை சதம் பட்டியலில் 5ஆவது இடத்தில் உள்ளார். முதலிடத்தில் பாகிஸ்தான் (242) வீராங்கனையும், இந்தியாவின் மிதாலி ராஜ் 21 ஓட்டங்களுடன் 2ஆவது இடத்திலும் இருக்கிறார்கள். மற்ற 7 இடங்களையும் ஆஸி. வீராங்கனைகள் ஆக்கிரமித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அயர்லாந்துடனான ரி - 20; இந்திய அணியில் பும்ரா!

புதுடில்லி, ஜூன் 26

அயர்லாந்து அணிக்கு எதிரான சர்வதேச இருபது -20 கிரிக்கெட் தொடரில் ஜஸ்ப்ரித் பும்ராவை களமிறக்க இந்திய அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

முதுகு வலி காரணமாக கடந்த ஆண்டு செப்ரெம்பரில் முதல் ஜஸ்ப்பிரித் பும்ரா இந்திய அணிக்காக விளையாடவில்லை. இதைத் தொடர்ந்து ஐ. பி. எல். போட்டியிலும் அவர் களமிறங்கவில்லை.

இதனிடையே உடல்நலம் குணமாகி அவர் மீண்டு வருகிறார். இதைத் தொடர்ந்து அயர்லாந்து அணிக்கெதிராக இந்திய அணி விளையாடும் இருபது - 20 சர்வதேச போட்டிகளில் அவரை களமிறக்க அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஓகஸ்ட் 18, 20, 23 ஆகிய திகதிகளில் நடைபெறும் 3 சர்வதேச இருபது - 20 போட்டிகளில் இந்தியா, அயர்லாந்து அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டியில் அவரை களமிறக்குவது தொடர்பாக இந்திய தெரிவு குழுவினர் ஆலோசனை நடத்தி வருகின்றனர். இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனத் தெரிகிறது. (ஐ)







## இருபது - 20 கிரிக்கெட்டில் பட்லர் 10 ஆயிரம் ஓட்டங்கள்

மன்செஸ்டர், ஜூன் 26

இருபது -20 கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்கள் குவித்த 9ஆவது வீரர் என்ற சாதனையை இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் ஜோஸ் பட்லர் புரிந்துள்ளார்.

இங்கிலாந்தின் மன்செஸ்டர் நகரில் நடைபெற்ற டெர்பிஷையர் பல்கன்ஸ், லங்காஷெயர் அணிகளுக்கு இடையிலான இருபது - 20 லீக் போட்டியில் லங்காஷெயர் அணிக்காக ஜோஸ் பட்லர் விளையாடினார். இதில் அவர் 36 பந்துகளில் 83 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்தப் போட்டியின்போது, ஜோஸ் பட்லர் இருபது - 20 கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். அவர் தற்போது 10,080 ஓட்டங்களை இருபது -20 போட்டிகளில் குவித்துள்ளார்.

இருபது - 20 போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய 9ஆவது வீரர் ஜோஸ் பட்லர் ஆவார். மேலும் இங்கிலாந்து சார்பில் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய முதல் வீரர் பட்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கிறிஸ் கெயில் 14,752, சொஹைப் மலிக் 12,528, கிரன் பொலார்ட் 12,175, விராட் கோலி 11,965, டேவிட் வோர்னர் 11,695, அரோன் பின்ஞ் 11,392, ஹேல்ஸ் 11,214, ரோஹித் சர்மா 11,035 ஆகியோர் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தத்துள்ளனர். (ஐ)

# மேற்கிந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்தது சிம்பாப்வே அணி

ஹராரே, ஜூன் 26

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் 10 நாடுகளுக்கு இடையிலான ஐ. சி. சி. உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் ஏ குழுவில் நெதர்லாந்தை தொடர்ந்து சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளும் சுப்பர் 6 சுற்றில் விளையாட தகுதிபெற்றுக்கொண்டன.

சிம்பாப்வேயுடனான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் தோல்வி அடைந்தபோதிலும் அந்தக் குழுவில் இடம்பெற்ற நேபாளமும் ஐக்கிய அமெரிக்காவும் ஏற்கனவே வெளியேற்றப்பட்டதால் இந்தத் தோல்வி மேற்கிந்தியத் தீவுகளுக்கு முதல் சுற்றில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

சிம்பாப்வேயின் வெற்றியில் சிக்கந்தர் ரஸா, ரெயான் பேர்ல் ஆகியோர் குவித்த அரைச் சதங்கள் முக்கிய பங்காற்றின.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 49.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது.

ஜோய்லோர்ட் கம்பி (26), அணித் தலைவர் க்ரெய்க் ஏர்வின் (47) ஆகிய இருவரும் 63 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

ஆனால், முதல் 4 விக்கெட்கள் சீரான இடைவெளியில் வீழ்ந்ததால் சிம்பாப்வே தடுமாற்றத்தை எதிர்கொண்டது. (112 - 4 விக்.)

எவ்வாறாயினும் சிக்கந்தர் ராஸா, ரெயான் பேர்ல் ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 87 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை நல்ல நிலையில் இட்டனர். சிக்கந்தர் ரஸா 68 ஓட்டங்களையும் ரெயான் பேர்ல் 50 ஓட்டங்களையும் சோன் வில்லியம்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் கீமோ போல் 61 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அல்ஸாரி ஜோசப் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் அக்கீல் ஹொசெய்ன் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 44.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

கய்ல் மேயர்ஸ் (56), ப்ரண்டன் கிங் (20) ஆகிய இருவரும் ஆரம்ப விக்கெட்டுக்காக 6.3 ஓவர்களில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

32ஆவது ஓவரில் மேற்கிந்தியத் தீவுகள் 4 விக்கெட்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்று சிறந்த நிலையில் இருந்தது. ஆனால், 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கடைசி 6 விக்கெட்களை இழந்து தோல்வியைத் தழுவியது.

மத்திய வரிசையில் ஷாய் ஹோப் (30), நிக்கலஸ் பூரண் (34), ரொஸ்டன் சேஸ் (44) ஆகிய மூவரே ஓரளவு திறமையை வெளிப்படுத்தினர்.

பந்துவீச்சில் டெண்டாய் சட்டாரா 52 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரிச்சர்ட் எங்கராவா, ப்ளெசிங் முஸராபனி, சிங்கந்தர் ராஸா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# ‘ஸ்ரிக்கர்’ இல்லாமல் மதுபானம் விற்பவர்களின் உரிமம் இரத்து!

## வரித்துறையினர் நடவடிக்கை

**கொழும்பு, ஜூன் 26**

**ஸ்ரிக்கர் இல்லாமல் மதுபானம் விற்கும் கடைகளின் மதுபான உரிமத்தை இரத்து செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வரி செலுத்தாமல் ஏய்ப்பு செய்யும் உற்பத்தி நிறுவனங்களின் உரிமத்தை இரத்து செய்யவும் கலால் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

தேசிய பொருளாதாரம் மற்றும் இயற்பியல் திட்டமிடல் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு இத்தகைய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

மதுபான உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து பெற வேண்டிய வரிகளை விரைவாக அறவிடுமாறு கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கம பணிப்புரை விடுத்துள்ளார்.

பல வருடங்களாக கலால் திணைக்களத்தின் வருமானம் அதிகரிக்கவில்லை என மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். மதுவின் விலை உயர்வால் மட்டும் வருமானம் குறைந்துள்ளதை அவதானிக்காமல், இந்நாட்டில் உள்ள பெரிய மதுபான உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து சரியான முறையில் வரி வசூலிக்கப் படுவதிலும் கவனம் செலுத்துவது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கை கலால் திணைக்களம் டிஜிற்றல் மயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிறுவனம் 110 வருட வரலாற்றைக் கொண்ட நிறுவனம் என்றும், இந்த நிறுவனம் டிஜிற்றல் மயமாக்கப்படாமல் இருப்பது பலவீனம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மதுபான ஆலைகளில் உள்ள ஒவ்வொரு மதுபான போத்தலிலும் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்கும் அமைப்பை தயார் செய்ய தேசியப் பொருளாதாரம் மற்றும் இயற்பியல் திட்டமிடல் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு அறிவுறுத்தியுள்ளது. ஸ்ரிக்கர் இல்லாத மது போத்தல்கள் சந்தையில் வெளியாகும் போக்கு காணப்படுவதாக இங்கு குறிப்பிடப்பட்டது. இதன் காரணமாக, இந்த விவகாரத்தை சரிபார்ப்பதற்கு முறையான திட்டத்தை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு குழு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்ற உதவுவோருக்கு வெகுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 26

சட்டவிரோத துப்பாக்கிகள், கைக்குண்டுகள் புழக்கம் அதிகரிப்பால் குற்றங்கள் அதிகரித்துள்ளன. எனவே, அதனை தவிர்க்க தேடுதல் நடவடிக்கைகளை பொலிஸார் அதிகரித்துள்ளனர்.

சட்டவிரோத துப்பாக்கிகள், கைக்குண்டுகளை தேடுவதற்கு உதவும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தகவல் கொடுக்கும் தனியாருக்கு வழங்கப்படும் வெகுமதியை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வழங்கிய அறிவுறுத்தலின் படி, பொலிஸ் மா அதிபர் சி. ஈ. விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அடிப்படை நடவடிக்கையாக நேற்று சுற்றிவளைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதி வரை தொடரவுள்ள இந்த தேடுதல் நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளுக்கு வழங்கப்படும் வெகுமதி தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரி-56 துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வெகுமதியும், தனியார் உளவாளிக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

இதேவேளை பல்வேறு வகையான தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டுகளை கைது செய்பவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை அதிகரிக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

# பஸ்ஸில் பயணிக்கும் பெண்கள் அவதானம்

கொழும்பு, ஜூன் 26

பஸ்களில் பயணிக்கும் பெண்களுடன் நட்பாகப் பழகி அவர்களுக்கு போதைப்பொருள் கொடுத்துத் தங்கப் ஆபரணங்களை திருடிய சந்தேகநபர் ஒருவரை கட்டுநாயக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 4 போதை மாத்திரைகள் மற்றும் தங்க ஆபரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவராக யாழ்ப்பாணத்தவர் தெரிவு

கொழும்பு, ஜூன் 26

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக யாழ்ப் பாணத்தை சேர்ந்த கே. பால கிருஷ்ணன் தெரிவாகியுள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுச் சபை கூடி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் அடுத்த நான்கு ஆண்டுகளுக் கான தலைவர் மற்றும் பெதுச் சபை தெரிவு செய்யப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவராக மத்திய குழுவின் மூத்த உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக தொண்டர், பிரிவுத்தலைவர், கிளைத்தலைவராக சேவை யாற்றியவராவார்.

தலைவர் கே. பாலகிருஷ்ணன், யாழ்ப்பாணக் கிளையின் தலைவராக இருந்த காலத்தில் தான் ஏ-9 முதன்மை வீதியில் கச்சேரிக்கு அண்மையாக எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை உருவாக்கி அதனூடாகப் பெறப்படும் இலாபத்தில் பல சமூக சேவைகளை ஆற்றுவதற்கு ஆணிவேராக இருந்து செயல்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சிமெந்து உள்ளிட்டவற்றின் விலைகளை குறைக்க பேச்சு



கொழும்பு, ஜூன் 26

சிமெந்து, தரை ஓடுகள் (ரைல்ஸ்), வண்ணப்பூச்சு (பெயின்ற்) விலை குறைப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வர்த்தகம், உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த பொருட்களின் சந்தை விலையை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர், அதற்காக தொடர்ந்தும் பாடுபடுவேன் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை செயல்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

# உணவின்றி தவிக்கும் கிராம மக்கள் அரசு அக்கறை காட்ட வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஜூன் 26

கிராமங்களில் பொருளாதாரத்தில் சோர்ந்துபோய் உணவு கிடைக்காமல் தவிக்கும் மக்கள் தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயல்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமப்புற மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்னைகளுக்கு அரசியல் கேலி, விமர்சனங்களுக்கு ஆளாகாமல் அரசு பதில் அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் கிராம அமைப்புகளை சேர்ந்தவர்களை

“உள்ளூர் தொழில்முனைவோர் மற்றும் வணிகர்கள் மற்றும் விவசாயிகள் மற்றும் மீனவர்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஐ. எம். எவ். மற்றும் சர்வதேச விவகாரங்களில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக நான் குற்றஞ்சாட்டவில்லை. ஆனால், விவசாயிகள் மிகுந்த சிரமத்தில் உள்ளனர். பல இடங்களில் அரிசி விலை சரிந்துள்ளது. மேலும், சோளம் மற்றும் பிற உள்ளூர் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

யங்களில் வெளிநாட்டில் இருந்து அரிசி கொண்டு வந்தால் குறைவாக கொடுக்கலாம் என்று ஒரு குறிப்பிட்ட கருத்து உருவாகியிருப்பதை பார்க்கிறோம். ஆனால், நாட்டில் இத்தகைய பொருட்களின் விலையில் பெரிய குறைவை நாம் காணவில்லை. மறுபுறம், அவ்வாறு செய்வதால் உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்க முடியாது.

சமீபகாலமாக பல்வேறு புள்ளி விவரங்களை பார்த்துவிட்டு, கிராமமாகச் சென்று மக்களிடம் பேசினாலும், கிராமப்புறப் பொருளாதாரத்தில் மிகப்பெரிய அடக்குமுறை இருப்பது புரிகிறது. எனவே, அந்த கிராம மக்கள் படும் சிரமங்கள் குறித்து அரசு அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்,” என்றார். (ஐ)

# ஆற்றில் மூழ்கி மாணவன் பலி!

கண்டி, ஜூன் 26

ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் இருவ ரில் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்தார். மற்றையவர் காப்பாற் றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டி தென்னக்கும்புர பாலத்துக்கு அருகில் மகாவலி கங்கையில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இரு மாணவர்களும் கண்டியின் பிரபல பாடசாலையில் கற்கின்ற 15 வயதுடைய மாணவர்களாவர்.

காப்பாற்றப்பட்ட மாணவன் அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த வர் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ஐ)

# டெங்கு நோய் பரவல் தாக்கம் அதிகரிக்கும்

## சுகாதார துறை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 26

எதிர்வரும் பருவமழை காலப்பகுதியில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளன என்று மருத்துவர் ஆனந்த விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டெங்குவை அரசாங்கத்தாலும் சுகாதாரத்துறையால் மாத்திரம் தனித்து இயங்கி அழிக்க முடியாது. அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மல்லாவி...

மோட்டார் சைக்கிளை மோதியது. இதன்போது இரு வாகனங்களும் தீப் பிடித்து எரிந்துள்ளன.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். படுகாயமடைந்த இளைஞர் மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கோட்டாபயவை...

இணையத்தளம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித் தார்.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரதூரமான மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப் படுவது ஜே. வி. பி காலத் தில் கோட்டாபய ராஜபக்ஷ மாத்தளைக்கு பொறுப்பாக காணப் பட்ட காலம் வரை நீள்கின்றது என் பதை மனித புதைகுழிகள் குறித்த புதிய அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

அன்று தொடக்கம் இன்றுவரை ஜே. வி. பி. காலத்தில் போர்க் குற்றத் தில் ஈடுபட்டவர்களோ அல்லது இறுதிப் போர் குற்றத்தில் ஈடுபட்ட வர்களோ பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப் படவில்லை.

மாத்தளையில் இடம்பெற்ற சம்பவங்களுக்காகவோ அல்லது இறுதிப் போரில் இடம்பெற்ற சம்பவங்களுக்காகவோ இந்த அரசாங்கம் கோட்டாபய ராஜபக்சவை பொறுப்புக்கூறச் செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம்.

தற்போதைய அரசாங்கம் அதன் இருப்புக்காகவும் ஆதரவுக்காகவும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடமைப் பட்டிருப்பதே இதற்கு காரணம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## வேட்புமனு...

தினேஷ் குணவர்த்தனவுடன் கலந்துரையாட இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தேர்தல் ஒத்திவைக்கப்படுவதால் வேட்புமனுக்களை இரத்து செய்யுமாறு பலர் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான சிறப்பு பிரேரணையை பாராமன்றத்தில் நிறைவேற்றி சட்ட ஆலோசனையைப் பெறவும் திட்டமிடப்படுவதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

## ரணிலின்...

மேலும்,

“தமிழ் மக்களின் இனப்பிரச்னையை தீர்க்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழ் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுகளை மேற்கொள்ளவில்லை. பேச்சு ஆரம்பிக்கப்பட்ட போதே ஒற்றையாட்சி என்ற வரையறைக்குள்தான் தீர்வு என்பதை ரணில் கூறினார். எனவே இங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை.

சர்வதேச மட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கை உயர்த்தும் நோக்கில் இனப்பிரச்னைக்கு தீர்வு என்ற கண்துடைப்பு பேச்சுக்கு சென்ற தமிழரசு கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், விக்னேஸ்வரன் அணியினரை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ் மக்களின் அடையாளங்கள், நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று ரணில் அறிவித்த பின்னும் பேச்சில் பங்கேற்று அந்தத் தமிழ் கட்சிகள் மக்களை ஏமாற்றுகின்றன - என்றும் கூறினார். (ஐ)

# விலங்குகளை வேட்டையாடிய இருவர் துப்பாக்கி சூட்டில் காயம்!

### மன்னாரில் நேற்று சம்பவம்

மன்னார், ஜூன் 26

காட்டு விலங்குகளை வேட்டையாடி மோட்டார் சைக்கிள்களில் இறைச்சியை கொண்டு சென்றவர்கள் மீது நடத்தப் பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரு வேட்டைக்காரர்கள் காயமடைந்து மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று மன்னார் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய இந்தக் குழுவில் இருந்த மேலும் இருவர் இறைச்சியுடன் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஏரி காப்புக்காட்டில் விலங்குகளை வேட்டையாட மோட்டார் சைக்கிள்களில் குழு ஒன்று பயணிப்பதாக முள்ளிக்குளம் வனஜீவராசிகள் திணைக்கள பணிமனைக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலின் பிரகாரம் நான்கு வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மறிச்சுக்கட்டி பகுதியில் திடீர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

வேட்டைக்காரர்கள் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தாமல் தப்பியோட முற்பட்ட போது வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் ரிப்பீட்டர் ரக துப்பாக்கியால் சுட்டார் என்று பொலிஸார் தெரவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் தப்பிச் சென்ற இருவர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனரென பொலிஸாருக்கு தெரிய வந்தது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் தலைமையக பொலிஸ் அதிகாரிகள் குழு மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மருந்துகளை கடத்திய சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, ஜூன் 26

சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட மருந்து தொகையுடன் சந்தேகநபர் ஒருவர் கற்பிட்டி - கரம்ப பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விற்பனைக்காகவே குறித்த மருந்து தொகையானது இவ்வாறு கொண்டு செல்லப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்போது 42 ஆயிரத்து 300 மருந்து அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 29 வயதான சந்தேகநபரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட வேன் மற்றும் மருந்து தொகையுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு

கொழும்பு, ஜூன் 26

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட ஐந்து புதிய உறுப்பினர்களின் பட்டியல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமனம் செய்வார் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

அரசமைப்பு சபை தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை தேர்வு செய்துள்ளது. இதனடிப்படையில், அதன் தலைவராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்கவை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். ஏ. பி. சி. பெரேரா, முன்னாள் சட்ட ஆலோசகர் அதிபர் சட்டத்தரணி தீபானி குமாரஜீவ, சட்டத்தரணி அமீர் பைஸ் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி ரமேஷ் ராமசாமி ஆகியோரின் பெயர்களும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக முன்மொழியப்பட்டுள்ளன.

இவர்களின் பதவிக்காலம் உரிய முன்மொழிவுகள் தொடர்பில் அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் 5 வருட காலத்துக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வடக்கு...

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம்.

மேலும்,

தமிழ் மக்கள் ஆயுத போராட்டத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். ஆயுத போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழினம் இரண்டாம் தர பிரஜைகளாகவே இந்த நாட்டிலே அழைக்கப்பட்டோம் .

2009 மே 18 உடன் ஆயுதப் போராட்டம் முற்றுமுழுதாக மௌனிக்கப்பட்டது. இந்த போரட்டம் மௌனிக்கப்படும் முன்னர் பல தலைவர்களை இழந்திருக்கின்றோம். அதில் போரட்ட தலைவர்கள் மாத்திரமல்லர், மிதவாத கட்சியான தழிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசு கட்சியின் தலைவர்கள் அமிர்தலிங்கம் உட்பட பல தலைவர்களை இழந்திருக்கின்றோம்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன சமாதன பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கினார். 2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்ட அரசு ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு வட - கிழக்கில் வித்தியசமான ஒரு திணிப்பை செய்துவருகின்றது.

அதுதான் தமிழர் தேசத்தில் விகாரைகள் அமைக்கவேண்டும், தமிழரின் குடிபரம்பலை மாற்றி அமைக்க வேண்டும், வெலிஓயா குடியேற்றம் மூலம் இணைந்திருந்த வடக்கு, கிழக்கை நிலத் தொடர்பற்ற மாகாணங்களாக பிரிப்பது போன்ற நடவடிக்கையை திட்டமிட்டு செய்துவருகின்றது - என்றார். (ஐ)

## சிற்றூர்தி...

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி பயணித்த தனியார் சிற்றூர்தியும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஹைஏஸ் வாகனமும் பயணித்தன. வேகமாக சென்ற தனியார் சிற்றூர்தி, மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டது. அப்போது எதிர்த்திசை மார்க்கமாக வந்த ஹைஏஸ் வாகனத்துடன் மோதியது.

இதில், தடம்புரண்ட தனியார் சிற்றூர்தி சுமார் 100 அடிக்கும் அதிகமான தூரம் இழுபட்டு சென்றது. இதன்போது பேருந்தில் சுமார் 40 பேர் இருந்தனர். இவர்களில் 9 பேர் காயமடைந்தனர். இவர்களில் 3 பேர் மாணவர்களும் சிற்றூர்தியின் சாரதியும் அடங்குவர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மன்னாரில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, ஜூன் 26

மன்னாரில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

பேசாலை - சிறுதோப்பை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மைக்கல் ஜெயரூபன் (வயது-49) என்பவரே உயிரிழந்தார்.

மன்னார் மருத்துவமனையில் அம்புலன்ஸ் சாரதியாக கடமையாற்றிவரும் அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

இதனை தொடர்ந்து மயக்கம் அடைந்த நிலையில் எருக்கலம்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் மன்னார் மருத்துவமனைக்கும், பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# டொலருக்கு எதிராக ரூபாய் 18 சதவீதத்தால் உயர்ந்தது!

கொழும்பு, ஜூன் 26

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி இந்த ஆண்டில் 18 சதவீதம் அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வரையான காலப்பகுதியில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 18.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் ரூபாயின் பெறுமதி தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையின்படி இலங்கை ரூபாயின் பெறுமதி ஜப்பானிய யென்னுக்கு நிகராக 27.06 சதவீதத்தாலும், பிரித்தானிய பவுண்டுக்கு நிகராக 12.01 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், யூரோவுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 15.02 சதவீதத்தாலும் இந்திய ரூபாய்க்கு நிகராக 17.01 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# புகையிரதத் திணைக்களத்தை தனியார் மயமாக்க முயற்சி!

கொழும்பு, ஜூன் 26

**புகையிரதத் திணைக்களத்தின் பல பிரிவுகளை தனியாருக்கு மாற்றும் முயற்சி நடைபெற்று வருகின்றன என்று அந்தத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பல இந்திய மற்றும் சீன நிறுவனங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்க முயற்சிப்பதாகவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான ஓர் உயர்மட்ட அரசியல்வாதி அதற்காக முனைப்புடன் செயல்பட்டு வருகிறார் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பில் புகையிரத திணைக்களத்தின் பல பிரதானிகளுடன் காலியில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளன. இதன்போது, அந்த அதிகாரிகள் திணைக்களத்தை தனியார் மயமாக்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புகையிரத திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்கு போக்குவரத்து அமைச்சர் தீர்மானித்திருந்த போதிலும் கொழும்பில் இருந்து கண்டி, தெற்கு ரயில்வே மற்றும் வடக்கு புகையிரதத்தை தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. புகையிரத தொழிற்சங்கங்கள் அனைவரும் இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இதுகுறித்து, ரயில்வே பொது மேலாளர் டபிள்யூ. ஏ.டி.எஸ். குணசிங்கவிடம் வினவியபோது, தனியார் மயமாக்கல் தொடர்பான எந்தவொரு பிரேரணையும் இதுவரை உத்தியோகபூர்வமாக முன்வைக்கப்படவில்லை என்று கூறினார். (ஐ)

# சிறீ லங்கன் எயார்லைன்ஸின் 13 விமான சேவைகள் இரத்து



கொழும்பு, ஜூன் 26

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் ஜூன் 16 முதல் ஜூன் 22 வரை 13 விமான பயணங்களை இரத்து செய்துள்ளது. இதனால், ஜகார்த்தா, டில்லி, பம்பாய் ஹைதராபாத், சென்னை, சிங்கப்பூர், குவைத், அபுதாபி ஆகிய நகரங்களுக்குச் செல்ல விமான பயணச் சீட்டு வாங்கியிருந்த விமானப் பயணிகள் கடும் சிரமத்துக்குள்ளாகினர்.

இந்த காலப்பகுதியில் கொரியாவுக்கு வேலைக்கு செல்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் தெரிவு செய்யப்பட்ட இலங்கையர்கள் குழுவினால் குறித்த திகதியில் பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

இந்த சம்பவம் குறித்த செய்திகள் கடந்த சில நாட்களாக ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்திருந்தன .

திடீரென விமானங்கள் இரத்து செய்யப்பட்டமையால் விமானப் பயணிகள் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்த விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா,

“கொரியாவுக்குச் செல்லும் விமானத்தை ஓட்டிய விமானி ஓஷத விமலரத்ன, பிற்பகல் 1.40 மணிக்கு மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். அத்தகைய அறிக்கையை அனுப்பிய பிறகு, சர்வதேச விதிகளின்படி, தலைமை விமானி மட்டுமே இந்த விமானத்தை இயக்க முடியாது. மேலும் 22 விமானிகள் முதல் அதிகாரிகளாக செயல்பட்டனர். அன்று அவர்களுக்கு ஓய்வு நாள். அந்த விமானிகளை பணிக்கு அழைத்தார்கள். ஆனால் யாரும் வரவில்லை. இதுதான் கசப்பான உண்மை” என்றார்.

# இலங்கை உள்ளிட்ட நாடுகளின் உள்விவகாரத்தில் தலையிடக்கூடாது

## இலங்கைக்கான ரஷ்ய தூதுவர்

கொழும்பு, ஜூன் 26

இலங்கை போன்ற சுதந்திர நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான மேற்குலகின் முயற்சிகளை இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் கண்டித்துள்ளார்.

சில சர்வதேச விவகாரங்களில் இலங்கை எடுத்துள்ள சமநிலையான - நடுநிலையான நிலைப்பாட்டை ரஷ்ய தூதுவர் லெவென் ஜகாரியன் பாராட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கை போன்ற சுதந்திர நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான மேற்குலகின் முயற்சிகளை அவர் கண்டித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் தங்களின் உள்விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டும். இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது முற்றாக ஏற்றுக்கொள்ள முடி யாத விடயம் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கடலட்டை பண்ணைகளால் மீனினங்கள் அழிவடையும்

## மெசிடோ நிறுவனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

கடலட்டை பண்ணைகளுக்காக வடக்கு கடலின் ஆழம் குறைந்த பகுதிகளை சீனாவின் பினாமி நிறுவனங்கள் ஆக்கிரமிக்குமானால், எதிர்கால சந்ததியினருக்கு மீன்களை கண்காட்சி நிகழ்வுகளில்தான் காட்ட முடியும் என மெசிடோ நிறுவனத்தின் உத்தியோகத்தர் விவேகி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை உலக வங்கியின் அறிக்கை தொடர்பாக கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், வடக்கில் வளமான கடல் பகுதிகளில் கடல் வேளாண்மை என்ற பெயரில் அட்டை பண்ணைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

பாரம்பரியமாக கடல் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில், அவர்கள் மாற்றுத் தொழில்களுக்கு செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மீன் இனங்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாத அளவுக்கு கடல் சேற்றுக்கடலாக மாற்றப்பட்டு வருவதால், எமது எதிர்கால சந்ததியினருக்கு மீன் இனங்களை காட்ட முடியாத சூழ்நிலை உருவாகும்.

தற்போது அலங்கார மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்படும் நிலையில், நாம் காலங்காலமாக கடல் உணவாக உண்டு வந்த மீன்களை, மீன் கண்காட்சிகளில்தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு காட்டவேண்டிய சூழ்நிலை ஏற்படப்போகிறது.

அது மட்டுமல்லாமல், சீனாவில் இருந்து பிளாஸ்ரிக் முட்டைகள் இறக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சீனா செயற்கை மீன்களையும் உணவுக்காக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது.

வடக்கில் இயற்கையாக மீன் இனங்கள் கிடைக்கும் கடல் பகுதிகளை ஆக்கிரமித்து தனது நாட்டுக்கு தேவையான அட்டைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நிலையில் எமது மக்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை உணவாக உட்கொள்கின்றனர்.

இயற்கை நீரோட்டங்களை மறித்து, கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதால் மீன் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ள நிலையில், பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஆடம்பர விடுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

ஆகவே, வட பகுதியில் மட்டுமல்ல, இலங்கையிலும் யாரும் உணவுத் தேவைக்காக பயன்படுத்தாத கடலட்டையை “டொலர் பெறப் போகிறோம்” எனக் கூறி அந்நிய நாட்டவர்களுக்கு கொடுத்து, எமது கடல் வளத்தை அழிக்க இடங்கொடுக்கக் கூடாது - என்றார். (ஐ)

# கொடுக்கல் - வாங்கல் தகராறு; வர்த்தகர் வாள்வெட்டில் காயம்!

கொழும்பு, ஜூன் 26

காரில் வந்த சிலர் வர்த்தகர் ஒருவரை தாக்கி வயிற்றில் வெட்டுக் காயங்களை ஏற்படுத்திய நிலையில் தாக்கப்பட்ட நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித் தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்துக்கு பண கொடுக்கல் - வாங்கலே காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

பாணந்துறை வேகட பிரதேசத்தில் வசிக்கும் 53 வயதுடைய வர்த்தகர் ஒருவரே தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் முன்னாள் சக்திவாய்ந்த பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரின் நெருங்கிய உறவினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன பொலிஸ் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# வர்த்தகரிடம் லஞ்சம் பெற்ற அதிகாரிகள் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 26

அவிசாவளை பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக வளாகத்தில் கடை ஒன்றை வழங்குவதற்காக வர்த்தகர் ஒருவரிடம் 4 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற முயன்ற குற்றச்சாட்டின் பேரில் சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக அதிகாரி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உரிய ஆவணங்களை விரைவாக தயாரிப்பதற்காக 5 இலட்சம் ரூபாயை முறைப்பாட்டாளரான வர்த்தகரிடம் சந்தேக நபர்கள் கோரிய நிலையிலேயே 4 இலட்சம் ரூபாயை பெற்ற போது இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# ஆயிரம் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் நிலை!

கொழும்பு, ஜூன் 26

இந்த வருட இறுதிக்குள் 60 வயதை எட்டிய 614 மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் ஓய்வு பெறவுள்ளனர். இது சுகாதாரத் துறைக்கு பெரும் சிக்கலை உருவாக்கலாம் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேசமயம், அடுத்த வருடத்துக்குள் விசேட மருத்துவர்களின் வெற்றிடங்கள் ஆயிரத்தைக் தாண்டும் என அதிகாரிகள் என மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

15 மூத்த மருத்துவ நிர்வாகிகள், 7 துணை மருத்துவ நிர்வாகிகள், 5 துணை இயக்குநர் ஜெனரல்கள், 2 மருத்துவத் துறை கூடுதல் செயலாளர்கள், 250 சிறப்பு மருத்துவர்கள், 340 மருத்துவர்கள் இந்த வருட இறுதிக்குள் ஓய்வு பெற உள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட அரச ஊழியர்களின் ஓய்வுக்கான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இவர்கள் ஓய்வு பெறவுள்ளனர். தற்போது சுமார் 750 சிறப்பு மருத்துவர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. (இடமாற்றப் பதிவேடு 2023 இன் படி) மற்றும் சுமார் 350 மருத்துவர்கள் வெளிநாட்டு பயிற்சிக்காக வெளிநாட்டில் உள்ளனர்.

டிசெம்பர் 2022 இல் சுமார் 250 சிறப்பு மருத்துவர்கள் வெளிநாடுகளில் பயிற்சி முடித்து நாடு திரும்பினர். ஆனால், அவர்களில் 120 பேர் இலங்கையில் மருத்துவ சேவையில் இணையவில்லை.

இதன்படி, எழுநூற்று ஐம்பது விசேட வைத்தியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எஞ்சிய 150 விசேட மருத்துவர்கள் போதுமானதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலைமையின் அடிப்படையில், அடுத்த வருடத்துக்குள் விசேட மருத்துவர்களின் வெற்றிடங்கள் ஆயிரத்தைக் தாண்டும் என அதிகாரிகள் என மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

63 வயதுக்கு மேற்பட்ட சுமார் 50 விசேட மருத்துவர்களே தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கான யோசனையை சுகாதார அமைச்சு நிதியமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.